# தின பூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று : 224 ஆடி 05

Regd. No.CBE/090/2011-2013

கோவை, திங்கள், ஜூலை 21, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த சவுதி நாட்டு இளவரசர் அல்வலீத் காலித் காலமானார்**

...2-ம் பக்கம்

**அகமதாபாத் விமான விபத்து பற்றி உள்நோக்கத்துடன் செய்தி: மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு**

...3-ம் பக்கம்

**பாக்.கிற்கு எதிராக விளையாட இந்திய மூத்த வீரர்கள் மறுப்பு: லெஜெண்ட்ஸ் கிரிக்கெட் ரத்து**

...6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் முதல்வரின் சகோதரர் மு.க.முத்து காலமானதை முன்னிட்டு சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சாட்டை துரைமுருகன் ஆகியோர் உள்ளனர்.

### 2 நாட்கள் பயணமாக நாளை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை, திருப்பூர் பயணம்

சென்னை, ஜூலை 21-

**பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வரும் 22, 23-ம் தேதிகளில் 2 நாட்கள் பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின்கோவை, திருப்பூர் செல்கிறார். அங்கு பெருந்தலைவர் காமராஜர் சிலையை அவர் திறந்து வைக்கிறார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகிற 22-ந் தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவைக்கு வருகிறார். கோவை விமான நிலையத்தில் அவருக்கு திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் கார் மூலம் திருப்பூர் மாவட்டம் செல்கிறார். அங்கு பல்லடம் மற்றும் உடுமலையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இதில் அமைச்சர்கள், கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். 23-ந் தேதி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொள்ளாச்சி செல்கிறார். அங்கு பொள்ளாச்சி-உடுமலை ரோடு நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் அலுவலக வளாகத்தில் பரம்பிக்குளம், ஆழியாறு பாசன திட்டம் நிறைவேற காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராஜர், சுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகிய தலைவர்களின் உருவச்சிலைகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

இதில் அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர் பவன்குமார் மற்றும் அரசு துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். இதையடுத்து கோவை வரும் அவர் தனியார் ஓட்டலில் நடைபெறும் கோவைக்கான மாஸ்டர் பிளான் திட்டம் குறித்து அதிகாரிகள், பொது மக்கள், தொழில்துறையினர், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட கோவை மாஸ்டர் பிளான்-2041 குறித்து பொது மக்களின் கருத்துகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிய உள்ளார். முதல்வர் கோவை வருகையை முன்னிட்டு மாநகர் மற்றும் ஊரக பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க கோவை மாநகர் மற்றும் புறநகர் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பல்வேறு அணிகளை சேர்ந்தவர்கள் தயாராகி வருகின்றனர்.

22 மற்றும் 23 ஆகிய 2 நாட்கள் திருப்பூர் மற்றும் உடுமலையில் நடைபெற உள்ள அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்ள உள்ளார். அதன்படி 22-ம் தேதி திருப்பூர் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்ட கோவில்வழி பஸ் நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார். வேலம்பாளையத்தில் புதிய அரசு மருத்துவமனை, பேருந்து நிலையத்தை முதல்வர் திறந்து வைக்கிறார். உடுமலை பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள பெரியார், பேரறிஞர் அண்ணா, அம்பேத்கர் சிலைகளை திறந்து வைக்கிறார்.

23-ம் தேதி உடுமலை நேதாஜி மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார். மேலும்முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் பேசுகிறார். திருப்பூர், உடுமலைப் பேட்டை, மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ நடத்துகிறார். இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

### பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்

# பாராளுமன்ற மழைக்கால தொடர் இன்று ஆரம்பம்

## ஆபரேஷன் சிந்தூர் உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் திட்டம்

புதுடெல்லி, ஜூலை 21-

**பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்ற மழைக்கால தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்து தொடரில் 'ஆபரேஷன் சிந்தூர்' உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதால் தொடரம் முழுவதும் அனல் பறக்கும் என்றே தெரிகிறது.**

**ஆகஸ்ட் 21 வரை...**

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. ஆகஸ்ட் 21-ம் தேதி வரை இந்த கூட்டத் தொடர் நடைபெறுகிறது. ரக்ஷா பந்தன் மற்றும் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்காக ஆகஸ்டு 12 முதல் 18-ம் தேதி வரை பாராளுமன்ற தொடருக்கு இடைவெளி விடப்படுகிறது.

ஏப்ரலில் நடந்த பகல்காம் பயங்கரவாத தாக்குதல், அதற்குப் பதிலடியாக மே மாதம் பாகிஸ்தான் மீது மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மற்றும் இரு நாடுகளின் ராணுவ மோதலுக்கு பிறகான முதல் கூட்டத் தொடர் என்பதால் முக்கியத்துவம் பெற்று உள்ளது.

**விமான விபத்து...**

ஆபரேஷன் சிந்தூர், டிரம்பின் பேச்சு,பீகாரில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், சீன எல்லை விவகாரம், மணிப்பூருக்கு பிரதமர் மோடி இதுவரை பயணம் மேற்கொள்ளாதது,

நாட்டையே உலுக்கிய அகமதாபாத் விமான விபத்து, விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்களும் முக்கியமாக எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு பிரச்சினைகளுக்காக எதிர்க்கட்சிகள் அவையை முடக்கி போராட்டத்தில் ஈடுபடும் என்று கருதப்படுகிறது.

**8 புதிய மசோ தாக்கள்**

இந்த மழைக்கால கூட்டத் தொடரில் 8 புதிய மசோதாக்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

8 புதிய சட்ட மசோதாக்கள் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. தேசிய விளையாட்டு நிர்வாக சட்ட மசோதா, புவியியல் பாரம்பரிய தளங்கள் மற்றும் புதைபடிமங்கள் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்ட மசோதா, சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்திருத்த மசோதா, தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு சட்டத்திருத்த மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் வரும் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

**புதிய மசோதாக்கள் விவரம்**

1) சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா
2) ஜன் விஸ்வாஸ் விதிகள் திருத்த மசோதா
3) இந்திய மேலாண்மை நிறுவனங்கள் திருத்த மசோதா
4) வரிவிதிப்பு சட்டங்கள் திருத்த மசோதா
5) புவி-பாரம்பரிய தளங்கள் மற்றும் புவி-எலிக்ஸ் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) மசோதா
6) சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா
7) தேசிய விளையாட்டு ஆளுகை மசோதா.
8) தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு திருத்த மசோதா.

**மணிப்பூரில் ஆட்சி...**

இந்த மசோதாக்கள் தவிர, மணிப்பூர் சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்திருத்த மசோதா, ஜன் விஸ்வாஸ் சட்டத்திருத்த மசோதா, இந்திய மேலாண்மை நிறுவன சட்டத்திருத்த மசோதா, வரி விதிப்பு சட்டங்கள் திருத்தம் மசோதா ஆகிய மேலும் 4 சட்டத்திருத்த மசோதாக்களும் புதிதாக அறிமுகப்படுத்தப் பட உள்ளன.

இந்தக் கூட்டத்தொடரில், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலை அரசு நாடவுள்ளது.

மேலும், அந்த மாநிலத்துக்கான நிதிமானியக் கோரிக்கைகளும் அவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

**விவாதத்திற்கு எடுக்க...**

கோவா மாநிலத்தில் உள்ள பழங்குடியினர் சட்டப் பேரவைத் தொகுதி பிரதிநிதித்துவத்தை மறுசீரமைப்பதற்கான மசோதா, வணிக கப்பல் மசோதா, இந்திய துறைமுகங்கள் மசோதா ஆகியவை மக்களவையின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வரும் கூட்டத்தொடரில் இந்த மசோதாக்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் எனக் கூறப்படுகிறது.

### பார்லி., கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த

# அனைத்துக்கட்சி கூட்டத்தில் மத்திய அரசு ஆலோசனை

புதுடெல்லி, ஜூலை 21-

**பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கவுள்ள நிலையில், நேற்று மத்திய அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று (ஜூலை 21) தொடங்கி ஆகஸ்ட் 21 வரை நடைபெறுகிறது.**

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கவுள்ள நிலையில், நேற்று நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் எம்.பி.க்கள் கே. சுரேஷ் மற்றும் ஜெய்ராம் ரமேஷ், சிவசேனா எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே, மத்திய அமைச்சர் அனுப்ரியா படேல், என்சிபி (சரத் பவார் அணி) எம்.பி. சுப்ரியா சுலே, பாஜக எம்.பி. ரவி கிஷன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும், சமாஜ்வாதி கட்சி, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய ஜனதா தளம், அதிமுக, திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்பி மஹுவா மாஜி, "ஜார்க்கண்ட் மிகவும் பணக்கார மாநிலமாக இருக்க வேண்டியது,

இம்மாநிலத்தில் ஏராளமான கனிம வளங்கள் உள்ளன. ஆனால் அது மூன்று ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, மத்திய அரசு ஜார்க்கண்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது. எங்கள் மாநிலத்திற்கு மத்திய அரசு ஆதரவு அளிக்கவேண்டும்" என்றார்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் பதிலடி தாக்குதலுக்குப் பிறகு நடக்கும் முதல் பாராளுமன்றக் கூட்டத்தொடர் இதுவாகும். இந்தியா - பாகிஸ்தான் போரை ட்ரம்ப் நிறுத்தியதாக கூறுவது குறித்தும் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கேள்விகள் எழுப்ப உள்ளன.

### விவசாயிகளுக்கு ரூ.53 ஆயிரம் கோடி பயிர்க்கடன்;

# மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு 10,997 கோடி ரூபாய் கடன்

சென்னை, ஜூலை 21-

**பயிர்க்கடன்களை உரிய கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாப் பயிர்கடன்களாக 66,24,955 விவசாயிகளுக்கு ரூ.53,340.60 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும், கூட்டுறவுத்துறை மூலம் மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு 10,997 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

1844-ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கம் இங்கிலாந்து நாட்டில் ரோச்டேல் பயனீர் என்பவரால் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பின் உலகம் முழுவதும் பரவிய கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் 1904 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1932 ஆம் ஆண்டில் சென்னை மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் ஏற்படுத்தப்பட்டு கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு வழி வகுக்கப் பட்டது.

**தமிழ்நாடு அரசு பெருமிதம்**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2021 தேர்தலுக்கு முன் தேர்தல் அறிக்கையில் கூறியபடி, கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்தில் 5 பவுனுக்கு உட்பட்டு நகைக் கடன் பெற்று 31.3.2021 வரை நிலுவையிலிருந்த நகைக் கடன் தொகை ஏறத்தாழ .6,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். அதன்படி, 11.70 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.4,904 கோடி அளவிற்குத் தள்ளுபடிச் சான்றிதழுடன், அவர்கள் அடமானம் வைத்த நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில், 31.3.2021 அன்று நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.2,118.80 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 1,01,963 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 10,56,816 மகளிர் பயன்பெற்றுள்ளனர். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.20 லட்சம் என்பதை ரூ.30 லட்சமாக உயர்த்தி 1,90,499 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,997.07 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

பயிர்க் கடன்களை உரிய கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாப் பயிர்கடன்களாக 66,24,955 விவசாயிகளுக்கு ரூ.53,340.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2021-2022ம் ஆண்டு முதல் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்குப் பராமரிப்புக் கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். 11,88,440 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.6,372.02 கோடி கடன் வழங்கியுள்ளது திராவிட மாடல் அரசு. ஆண்டிற்கு 5 சத வீத வட்டி விகிதத்தில் 19,358 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.63.22 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளைச் சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 47,221 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.225.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. சமூக நீதியை மேம்படுத்தும் வண்ணம் 16,578 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.470.01 கோடியும், 49,000 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.283.27 கோடியும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு தொழில் புரிகின்ற கலைஞர்கள் நலிவடையாமல் காத்திட அக்கலைஞர்களின் சமூக, பொருளாதார, நிதி நிலையை மேம்படுத்தும் வண்ணம், இதுவரை 4,494 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.18.80 கோடி அளவிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.392.52 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன்களும்; ரூ.2,089.90 கோடி அளவிற்கு நகைக்கடன்களும் வழங்கியுள்ளன. இச்சங்கங்கள், ரூ.10,283.21 கோடி அளவிற்கு வணிகமும் செய்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஆகிய இரு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணங்கள் 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ. 38.50 லட்சம் தள்ளுபடி செய்யப்பட்டது.

2021-2022 சட்டமன்ற

(கடைசி பக்கம் பார்க்க)

### நீலகிரி, தென்காசி, தேனி உள்ளிட்ட

# 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை 21-

**தமிழகத்தில் இன்று நீலகிரி,தென்காசி, தேனி கோவை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று ஒருசில இடங்களிலும், 22 முதல் 24-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

இன்று நீலகிரி, தென்காசி, தேனி மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும், 22-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலை பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE -501.51 பாயிண்ட் 81,757.73
NSE -143.05 பாயிண்ட் 24,968.40

**தங்கம்** 1 சவரன் ₹73,360 | 1 கிராம் ₹9,170

**வெள்ளி** 1 கிலோ ₹126 ,000 | 1 கிராம் ₹126.00

**டாலர்** ₹86.19

**பெட்ரோல்** ₹102.63 | **டீசல்** ₹94.24

## 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த சவுதி இளவரசர் காலமானார்



**சவுதி, ஜூலை 21-**

விபத்தில் சிக்கியதால் 20 ஆண்டுகளாக படுத்த படுக்கையாக கோமாவில் இருந்த சவுதி இளவரசர் அல்வலீத் பின் காலித் காலமானார். அவருக்கு வயது 36.

2005ஆம் ஆண்டு லண்டனில் உள்ள ராணுவ அகாடமியில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு மோசமான கார் விபத்தில் சிக்கினார் இளவரசர் அல்வலீத். அப்போது முதல் அவர் கோமாவில் இருந்து வந்தார். அறுவை சிகிச்சையின் போது, மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு காரணமாக மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் அவரை குணப்படுத்த இயலவில்லை. ஏறக்குறைய 20 ஆண்டுகளாக அவர் படுத்த படுக்கையிலேயே சுயநினைவின்றி இருந்து வந்தார்.

மருத்துவர்கள் கைவிரித்தாலும் இத்தனை ஆண்டுகளாக இளவரசர் காலித் தனது மகனை குணப்படுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையை ஒருபோதும் கைவிடவில்லை. தொடர்ந்து மகனை காப்பாற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். இஸ்லாமிய நிகழ்வுகளின் போது தனது மகன் குணமடைய தொடர்ந்து பிரார்த்தனை செய்தும் வந்தார்.

2005ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து, இளவரசர் அல்வலீத் ரியாத்தில் உள்ள கிங் அப்துல்அஜிஸ் மருத்துவ நகரத்திற்கு மாற்றப்பட்டு வென்டிலேட்டர் உதவியுடன் இருந்து வந்தார். அவரை மீண்டும் காப்பாற்றும் நம்பிக்கையில் அவரது குடும்பத்தினர் உலகம் முழுவதிலுமிருந்து மருத்துவ நிபுணர்களை அழைத்து வந்தனர். அவ்வப்போது நம்பிக்கை அளிக்கும் அசைவுகள் தென்பட்டாலும், பல ஆண்டுகளாக அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்த நிலையில் 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த வந்த அல்வலீத் பின் காலித் தனது 36-வது வயதில் உயிரிழந்ததாக அவரது தந்தையும் இளவரசருமான கலீத் பின் தலால் பின் அப்துல் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு: 3 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

**வாஷிங்டன், ஜூலை 21-**

வாஷிங்டனில் மர்மநபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள கிர்க்லேண்ட் பகுதியில் மர்மநபர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை போலீசார் தேடி வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு நடந்த இடத்திற்கு மக்கள் செல்வதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். லாஸ் ஏஞ்சலசில் ஒரு வாகனம் பெரிய கூட்டத்திற்குள் புகுந்த சில மணி நேரங்களுக்கு பிறகு இது நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெடிகுண்டு மிரட்டல் எதிரொலி: சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தாமதமாக இயக்கம்

**சென்னை, ஜூலை 21-**

சென்னை விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதனால் துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் விமானங்கள் தாமதமானது.

சென்னை விமான நிலைய மேலாளர் அறைக்கு நேற்று முன்தினம் வந்த ஒரு மர்ம இ-மெயில் தகவலில், சென்னை விமான நிலையத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு உள்ளதாகவும், எந்த நேரத்திலும் வெடித்து சிதறலாம் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த இமெயில் வெளிநாட்டில் இருந்து வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு சோதனைகள் தீவிரபடுத்தப்பட்டது. பயணிகள் பாதுகாப்பு சோதனையும் அதிகரிக்கப்பட்டது. இந்த சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரிந்தது. இந்த பரிசோதனைகள் காரணமாக சென்னையில் இருந்து வெளிநாடுகளுக்கு நேற்று புறப்பட்டு செல்லும் விமானங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றன.

ஹாங்காங், பிராங்க் பார்ட், குவைத், துபாய், சார்ஜா, தோகா, மஸ்கட், சிங்கப்பூர், கோலாலம்பூர், லண்டன் உள்ளிட்ட விமானங்கள் சுமார் அரை மணி நேரத்தில் இருந்து ஒரு மணி நேரம் வரை தாமதமாக புறப்பட்டன.

## ஈரானின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து

**டெஹ்ரான், ஜூலை 21-**

ஈரானில் மிக பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து பதற்றத்தை உருவாக்கி உள்ளது.

இதுபற்றிய விவரம் வருமாறு; ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இருந்து 670 கி.மீ.,தொலைவில் அபாடன் என்ற எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்று இயங்கி வருகிறது.

இந்த ஆலை 1912ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஈரான் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டு மொத்த எரிபொருளில் இங்கு மட்டுமே 25 சதவீதம் உற்பத்தியாகிறது.

இந் நிலையில், இந்த ஆலையில் உள்ள பழுது பார்க்கும் ஒரு அலகில் திடீர் என தீ விபத்து ஏற்பட்டது. மளமளவென மற்ற பகுதிகளுக்கும் தீ பரவியது. தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் உடனடியாக சம்பந்தப்பட்ட ஆலைக்கு சென்று தீயணைக்கும் பணியில் இறங்கினர். இந்நிலையில் இந்த தீ விபத்தில் சிக்கி ஒருவர் பலியாகி உள்ளதாக, அந்நாட்டின் பார்லி. துணை சபாநாயகர் அலி நிக்சத் கூறினார்.

**மரம் மனிதனின் உரம்**

## திருச்செந்தூர் கோவிலில் 7 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்

**திருச்செந்தூர், ஜூலை 21-**

ஆடி கிருத்திகையை யொட்டி திருச்செந்தூர் கோவிலில் 7 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று முருகப்பெருமானுக்கு உகந்த நட்சத்திரமான கிருத்திகை நட்சத்திரம் நாளாகும். இந்த நாள் மிக சிறப்பு வாய்ந்த நாளாக கருதப்படுகிறது.

அதுவும் ஆடி மாதத்தில் வரக்கூடிய கிருத்திகை நட்சத்திரம் அன்று முருகனை வழிபடக்கூடிய உகந்த நாளாகவும் கருதப்படுகிறது. இந்த நாளில் பக்தர்கள் விரதம் இருந்து முருகனை வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அவ்வாறு வழிபட்டால் முருகப் பெருமானின் பரிபரிபூரண அருள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

அந்த வகையில் நேற்று ஆடி கிருத்திகை என்பதால் தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலில் குவிந்தனர். வழக்கமாக கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும், காலை 9 மணிக்கு ஜெயந்திரநாதருக்கு சிறப்பு அபிஷேகமும் நடைபெற்றது.

தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்து வந்திருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் அதிகாலை முதல் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 7 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்ததால், கோவில் வளாகம் திருவிழா போல் காட்சியளித்தது. மேலும் ஆயிரக்கணக்கான வாகனங்களில் பக்தர்கள் வந்திருந்ததால் திருச்செந்தூர் நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

## பிரம்மபுத்திரா நதியில் மெகா அணை கட்டும் பணியை தொடங்கியது சீனா..!

### இந்தியாவுக்கு கடும் பாதிப்பு ஏற்படும் அபாயம்

**பெய்ஜிங், ஜூலை 21-**

பிரம்மபுத்திரா நதியில் மெகா அணை கட்டும் வேலையை சீனா தொடங்கி உள்ளது. இந்த அணையால், இந்தியா, வங்கதேசத்தில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நம் அண்டை நாடான சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில், யார்லாங் சாங்போ நதியில், பிரமாண்டமான அணையைக் கட்ட சீனா திட்டமிட்டது. அருணாச்சலப் பிரதேசத்துக்கு அருகே அமைந்துள்ள இந்த நதி இந்தியாவில் பிரம்மபுத்திரா என்று அழைக்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகளாக இழுபறியில் இருந்த திட்டத்தை தற்போது செயல்படுத்த அந்த நாடு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. அணை கட்டும் திட்டத்தின் தொடக்க விழாவில், பிரதமர் லி கியாங் கலந்து கொண்டார். இந்த அணையால், இந்தியா மற்றும் வங்கதேசத்தில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நிபுணர்கள் தெரிவித்தனர்.

பொருளாதார ரீதியாவும், ராஜதந்திர ரீதியாகவும் திபெத்தை இணைக்கும் இந்த திட்டத்திற்கு சீன அரசு கடந்த டிசம்பரில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அணை திட்டம் குறித்து இந்தியா சீனாவிடம் கடந்த ஜனவரியில் அதிருப்தி தெரிவித்து இருந்தது.

இந்தத் திட்டத்தில் ஐந்து நீர்மின் நிலையங்கள் கட்டப்படும், மொத்த முதலீடு 1.2 டிரில்லியன் யுவான் (167.1 பில்லியன் டாலர்) என மதிப்பிடப்பட்டு உள்ளது. பிரம்மபுத்திராவில் அணை கட்டும் பணி தொடங்கியதும், இந்தியாவுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய சீனாவிடம் மத்திய வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

## மு.க.முத்து மறைவு: முதல்வரை நேரில் சந்தித்து சீமான் ஆறுதல்

**சென்னை, ஜூலை 21-**

மு.க. முத்துவின் மறைவையொட்டி முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து சீமான் ஆறுதல் கூறினார்

முதல்வர் மு.க. ஸ்டாலினை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நேற்று நேரில் சந்தித்தார். சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள ஸ்டாலின் வீட்டில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் சகோதரர் மு.க முத்து மறைவுக்கு சீமான் ஆறுதல் கூறினார்.

## இந்தோனேஷியாவில் 280 பேருடன் சென்ற கப்பலில் தீ: 3 பேர் உயிரிழப்பு

**ஜகார்த்தா, ஜூலை 21-**

இந்தோனேஷியாவில் 280க்கும் மேற்பட்டோருடன் சென்ற சொகுசு கப்பலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். 150க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

இந்தோனேஷியாவில் பல தீவுகள் உள்ளன. அதில், மனாடோ-தஹூடா தீவுகளுக்கு இடையே கே எம் பார்சிலோனா விஏ என்ற சொகுசு கப்பல் இயக்கப்படுகிறது. இது அருகில் உள்ள தீவுகளுக்கும் சென்று வருகிறது. மனோடாவில் இருந்து தஹூடா நோக்கி 280க்கும் மேற்பட்டோருடன் இந்த கப்பல் சென்று கொண்டு இருந்தது. திடீரென இந்தக் கப்பலில் தீப்பற்றி எரிந்தது. இதனையடுத்து கப்பலில் இருந்த ஏராளமானோர் உயிர் தப்ப கடலில் குதித்தனர். தகவல் அறிந்த மீட்புப் படையினர் , பேரிடர் கால மீட்பு குழுவினர் உடனடியாக அந்த இடத்துக்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். தீ விபத்து காரணமாக கப்பலில் எழுந்த புகை விண்ணை முட்டும் அளவுக்கு இருந்தது.

இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்த நிலையில் 150க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர். மற்றவர்களை மீட்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது. இந்த விபத்து குறித்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளன.

## நடு வானில் என்ஜினில் தீ: அவசரமாக தரையிறக்கப்பட்ட டெல்டா ஏர்லைன்ஸ் விமானம்


**வாஷிங்டன், ஜூலை 21-**

நடுவானில் விமான என்ஜினில் தீப்பிடித்தது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டெல்டா ஏர் லைன்ஸ் நிறுவன விமானம் ஒன்று அட்லாண்டாவுக்கு புறப்பட்டது. போயிங் ரக விமானமான அது புறப்பட்ட சிறிது நேரத்திலேயே ஒரு என்ஜினில் தீப்பிடித்தது. விமானத்தின் இடது என்ஜினில் திடீரென்று தீப்பிடித்து எரிந்தது. இதை கவனித்த விமானி உடனே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். இதனால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. விமானத்தில் பயணிகள் கடும் பீதியடைந்தனர்.

என்ஜினில் தீப்பிடித்ததால் விமானத்தை அவசரமாக திரும்பி லாஸ் ஏஞ்சல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் விமானி பத்திரமாக தரையிறங்கினார். அங்கு தயார் நிலையில் இருந்த அவசரகால குழுவினர் விரைந்து செயல்பட்டு தீயை அணைத்தனர். விமானத்தில் இருந்து பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். பயணிகள் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. நடுவானில் விமான என்ஜினில் தீப்பிடித்தது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

## 21-07-2025



**இன்றைய ராசி பலன்கள்**

**மேஷம்:-** சுமாரான பணவரவு உள்ள நாள். ஆயினும் மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வெட்டி செலவுகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படும்.

**ரிஷபம்:-** ஆரோக்கியம் மேம்பாடு அடையும், தனலாபம் எதிர்பார்த்தபடி இருக்கும். நல்ல ருசியான உணவு கிடைக்கும். படுக்கை சுகம் உண்டு. மனதுக்குப் பிடித்த நவீன புத்தாடைகள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:-** வேலைப்பளு காரணமாக வேளா வேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். ஆறுவது சினம் என்றபடி முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்:-** பலவகைகளிலும் பண வருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும்.

**சிம்மம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். தொழிலில் புதிய நல் மாற்றங்கள் எதிர்பார்க்கலாம்.

**கன்னி:-** பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். வயிறு சம்பந்தமான உபாதைகள் மற்றும் தேவையற்ற அவமானங்கள் ஏற்படும்.

**துலாம்:-** நேர்மை தவறாமல் நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் குழப்பம் ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** இன்பச் சுற்றுலா, குறுகிய தூரப் பயணங்கள், நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதால் ஏற்படும் மனமகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் கிடைக்கும்.

**தனுசு:-** புதிய சொத்துக்கள் சேரும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடி கிடைக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளரை கவரும் வண்ணம் புதிய பரிசுத் திட்டங்களை அறிவிப்பது சிறப்பு.

**மகரம்:-** பயணங்கள் மற்றும் செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் வேதனைகளும் ஏற்படும். கட்டுக்கு அடங்காத செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:-** எல்லாவற்றிலும், எல்லோரையும் சந்தேகப்படும் குணம் ஏற்படும். மனக் கவலை மற்றும் சந்தோஷமற்ற வாழ்க்கை அமையும். வியாபாரத்தில் புதிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது.

**மீனம்:-** எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் அதிக தனலாபம் கிடைக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பர். எதிர் பாலர்பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்படும்.

## அடுத்தடுத்த நிலநடுக்கங்களால் ரஷ்யாவுக்கு சுனாமி எச்சரிக்கை

**மாஸ்கோ, ஜூலை 21-**

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரையில் ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ரஷ்யாவின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் பசிபிக் கடற்கரையில் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உட்பட மூன்று நிலநடுக்கங்கள் பதிவானதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று 6.7 மற்றும் 5 ரிக்டர் அளவிலான தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் கம்சட்கா மண்டலத்தின் தலைநகரான பெட்ரோபாவ் லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கிக்கு கிழக்கே சுமார் 140 கிமீ தொலைவில் ஏற்பட்டன. இந்த பகுதியில் 180,000 க்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இந்த நிலநடுக்கங்கள் பெட்ரோபாவ் லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கி கடற்கரையில் அடுத்தடுத்து 32 நிமிடங்களுக்குள் தாக்கின. இதன் பின்னர் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் 20 கிமீ ஆழத்தில் ஏற்பட்டதையடுத்து ரஷ்யாவின் சில பகுதிகளுக்கு அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் சுனாமி எச்சரிக்கையை விடுத்தது.

பசுபிக் பெருங்கடலுக்கு அருகே உள்ள பெட்ரோபாவ் லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கி பகுதியானது ஜப்பானின் வடகிழக்கிலும், அமெரிக்க மாநிலமான அலாஸ்காவின் மேற்கிலும் அமைந்துள்ளது. கம்சட்கா தீபகற்பம் பசிபிக் மற்றும் வட அமெரிக்க டெக்டோனிக் தகடுகள் சந்திக்கும் இடமாகும், இது ஒரு நில அதிர்வு வெப்ப மண்டலமாக அமைந்துள்ளது. இப்பகுதியில் 1900ம் ஆண்டு முதல் 8.3 ரிக்டருக்கு மேற்பட்ட ஏழு பெரிய நிலநடுக்கங்கள் தாக்கியுள்ளன. நவம்பர் 4, 1952 அன்று, கம்சட்காவில் 9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

## 50 பணய கைதிகளை விடுவிக்க கோரி இஸ்ரேலில் மக்கள் ஆர்ப்பாட்டம்

**டெல்அவிவ்,ஜூலை 21-**

50 பணய கைதிகளை உயிருடனோ அல்லது அவர்களின் உடல்களையோ திரும்ப கொண்டு வரவேண்டும் என்று இஸ்ரேலில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணய கைதிகளாக சிறை பிடித்தும் சென்றது. இதற்கு பதிலடியாக, காசாவை இலக்காக கொண்டு இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 58 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில், பணய கைதிகளில் சிலரை இஸ்ரேல் மீட்டது. மீதமுள்ளவர்களையும் மீட்போம் என சூளுரைத்துள்ளது. முதல் கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் மார்ச் 1-ம் தேதியுடன் முடிவடைந்தது. 2-வது கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாமல் உள்ளது.

இந்த சூழலில், காசாவில் சிறை பிடித்து வைக்கப்பட்டு உள்ள பணய கைதிகளில் 10 பேர் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என டிரம்ப் கூறினார். அதற்கான நம்பிக்கை உள்ளது என்றும் கடந்த வெள்ளி கிழமை நடந்த இரவு விருந்தின் போது கூறினார். கடந்த 6-ம் தேதி முதல், தோஹாவில் பேச்சுவார்த்தைக்கான முயற்சி நடந்து வருகிறது. 60 நாள் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு டிரம்பும் முயற்சி மேற்கொண்டு வருகிறார். எனினும், இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து வருகிறது.

இந்த சூழலில், 50 பணய கைதிகளை உயிருடனோ அல்லது அவர்களின் உடல்களையோ திரும்ப கொண்டு வரவேண்டும் என்றும், போரை முடிவுக்கு கொண்டு வர ஒரு விரிவான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் கோரி இஸ்ரேலில் மக்கள் பெருமளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் கைகளில் இஸ்ரேல் கொடிகளை ஏந்தியபடியும், பேனர்களையும் ஏந்தியபடியும், ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி கோஷம் எழுப்பியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தெலுங்கானா முதலமைச்சரை நேரில் சந்தித்த துல்கர் சல்மான்

**ஐதராபாத், ஜூலை 21-**



மலையாள சினிமா முன்னணி நடிகர்களுள் ஒருவர் துல்கர் சல்மான். இவர் கடைசியாக நடித்து வெளியான லக்கி பாஸ்கர் படம் மக்களிடையே பெரிய வரவேற்பை பெற்றது. அடுத்ததாக துல்கர் சல்மான் காந்தா என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தை செல்வமணி செல்வராஜ் இயக்குகிறார். இப்படத்தில் மிஸ்டர் பச்சன் திரைப்பட புகழ் பாக்யஸ்ரீ, துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்கிறார். இப்படத்தை வேஃபாரர் பிலிம்ஸ் மற்றும் ராணா ஸ்பிரிட் மீடியா நிறுவனம் இணைந்து தயாரிக்கிறது.

இந்நிலையில் துல்கர் சல்மான் தெலுங்கான முதல்வர் ரேவந்த் ரெட்டியை அவரது இல்லத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பில் துல்கர் சல்மானுடன் அவர் அடுத்து நடிக்கும் படங்களின் தயாரிப்பாளர்களுடன் சந்தித்தார்.அப்போது எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# விமான விபத்து பற்றி உள்நோக்கத்துடன் செய்தி

## மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு



**புதுடில்லி, ஜூலை 21-**

ஏர் இந்தியா விமான விபத்து பற்றி மேற்கத்திய ஊடகங்கள் உள்நோக்கத்துடன் செய்தி வெளியிடுவதாக, மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: மேற்கத்திய ஊடகங்கள் வெளியிட விரும்பும் செய்திகளுக்கு உள்நோக்கம் இருக்கலாம். விமான விபத்து புலனாய்வுப் பணியகம், விசாரணை முடியும் வரை பொறுமையுடன் இருக்கும் படி வேண்டுகோள் விடுத்துள்ளது. எனவே யூகங்களை தவிர்க்கும் படி மேற்கத்திய ஊடகங்களை கேட்டுக்கொள்கிறேன்.

முழு கருப்புப் பெட்டியையும் டிகோட் செய்வதிலும், இந்தியாவிலேயே தரவை ஆய்வு செய்வதிலும் விமான விபத்து புலனாய்வு பணியகம் அற்புதமான வேலையைச் செய்துள்ளனர். இது எங்களுக்கு மிகப்பெரிய வெற்றியாகும். ஏனென்றால் முந்தைய சம்பவங்களில், கருப்புப் பெட்டி சேதம் அடைந்ததாகக் காணப்பட்ட போதெல்லாம், தரவுகளை மீட்டெடுக்க அது எப்போதும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் ஏர் இந்தியா விமான விபத்தில், விமான விபத்து புலனாய்வு பணியகம் அனைத்தையும் வெற்றிகரமாக டிகோட் செய்திருப்பது இதுவே முதல் முறை.

தரவு இங்கே உள்ளது. முதற்கட்ட அறிக்கையும் வெளியிடப்பட்டு உள்ளது. இறுதி அறிக்கை வரும் வரை எந்தக் கருத்தையும் தெரிவிப்பது, யாருடைய சார்பாகவும் ஒரு நல்லதாக இருக்கும் என்று நான் நினைக்க வில்லை. நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறோம். முதற்கட்ட அறிக்கையை முழுமையாகப் படித்து வருகிறோம். மேலும் பாதுகாப்பு வசதிகள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். சம்பவம் மற்றும் விசாரணையைப் பொறுத்த வரை, நாங்கள் எதையும் சொல்வதற்கு முன் இறுதி அறிக்கைக்காக காத்து இருக்கிறோம். இவ்வாறு மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார்.

# அமர்நாத் யாத்திரை: ஜம்முவில் இருந்து 20-வது குழு புறப்பட்டது

**ஜம்மு, ஜூலை 21-**

அமர்நாத் பனி லிங்கத்தை தரிசிக்க ஜம்முவில் இருந்து 20-வது குழு புறப்பட்டது.

பனிமலைகள் சூழ்ந்த காஷ்மீர் அமர்நாத் குகைக்கோவிலில் இயற்கையாக உருவாகும் பனிலிங்கத்தை தரிசிக்க கடும் சிரமத்துக்கு மத்தியில் ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் பாத யாத்திரையாக வருகின்றனர். இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை கடந்த 2-ந் தேதி தொடங்கியது. அடுத்த மாதம் (ஆகஸ்டு) 9-ந் தேதி வரை 38 நாட்கள் யாத்திரை நடைபெற இருக்கிறது. இந்நிலையில் இந்த யாத்திரை, அனந்த்நாக் மாவட்டத்தில் 48 கி.மீ. தொலைவுள்ள நுன்வான்- பஹல்காம் பாரம்பரிய வழித்தடம், கந்தர்பால் மாவட்டத்தில் 14 கி.மீ. தொலைவுள்ள பால்டால் வழித்தடம் என இரு வழித்தடங்களில் நடைபெற்று வருகிறது.

நடப்பாண்டு ஜூலை 2-ஆம் தேதி தொடங்கிய அமர்நாத் யாத்திரையில் நேற்று 20-வது கட்டமாக 4,388 பேர் (ஜம்மு) பகவதி நகர் அடிப்படை முகாமிலிருந்து பனிலிங்கத்தைக் காண புறப்பட்டுள்ளனர். 115 வாகனங்கள் கொண்ட அணிவகுப்பில் 2,815 பக்தர்கள் பஹல்காமிற்கு புறப்பட்டனும், 95 வாகனங்களில் 1,573 பக்தர்கள் பால்டால் பாதையை விரும்பினர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது, யாத்திரை இரண்டு வழித்தடங்களிலும் சீராக நடைபெற்று வருகிறது. மேலும் பக்தர்களின் எண்ணிக்கை இன்றைய தினம் 3 லட்சத்தைத் தாண்டும். இதுவரை, 2.90 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் இயற்கையாகவே உருவான பனி சிவலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர். இவ்வாறு அவர் குறிப்பிட்டனர்.

# ஆட்சியில் பங்கு கொடுக்க நாங்கள் ஒன்றும் ஏமாளி அல்ல

## எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்



**திருத்துறைப்பூண்டி, ஜூலை 21-**

ஆட்சியில் பங்கு கொடுக்க நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பிரசார பயணத்தில் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தொகுதியில் தனது பிரசாரத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டார்.

திருத்துறைப்பூண்டியில் பிரசார பஸ்சில் நின்றபடி எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- எடப்பாடி பழனிசாமி அவரது உறவினர் வீட்டில் ரெய்டு நடந்ததால் தான் பா.ஜனதாவுடன் கூட்டணி வைத்து இருப்பதாக அமைச்சர் ஒருவர் பேசியிருக்கிறார். கீறல் விழுந்த ரெக்கார்டு மாதிரி இதை எத்தனை முறைதான் சொல்லிக் கொண்டே இருப்பீர்கள்.

நான் சொந்த காலில் நின்று உழைத்து கட்சி தொண்டர்கள் ஆதரவு பெற்று இந்த நிலைக்கு வந்து இருக்கிறேன். அப்படியென்றால் எந்த அளவுக்கு உழைத்து இருப்பேன் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். யாருடைய சிபாரிசு மூலமும் வரவில்லை. அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை பார்த்து முதல்வருக்கு பயம் வந்துவிட்டது. பா.ஜ.க.வுக்கு ஆட்சியில் பங்கு கொடுப்பீர்களா? என்று எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள். நாங்கள் ஒன்றும் ஏமாளி அல்ல... அ.தி.மு.க. பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். எங்களுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை.

தி.மு.க.வை அகற்ற வேண்டும் என்ற கொள்கையில் ஒத்த கருத்துடைய கட்சிகள் இணையணும். அது தான் எங்கள் நிலைப்பாடு. தி.மு.க.வை அகற்றவேண்டும் என்று பா.ஜ.க.வும் கருதுகிறது. அதே நிலைப்பாடோடு தான் பா.ஜ.க. எங்களுடன் கூட்டணி வைத்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## கட்சி கட்டுப்பாட்டை மீறியதாக

# பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் மூவர் இடைநீக்கம்: ராமதாஸ் அதிரடி



**சென்னை, ஜூலை 21-**

கட்சி கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டதாக பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் தற்காலிக இடைநீக்கம் செய்யப்படுவதாக அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பா.ம.க. தலைமை நிலைய செயலாளர் ம.அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: "பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் ராமதாஸ் அனுமதியோ உத்தரவோ இல்லாமல் எந்தவொரு முடிவையும் கட்சி சார்பாக சட்டமன்ற உறுப்பினர்களோ மற்றவர்களோ கட்சியின் விதிகளின் அடிப்படையில் தன்னிச்சையாக எந்த செயலும் செய்வது கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதோடு மட்டுமல்லாமல் ஒழுங்கீன நடவடிக்கை என்று கருதப்படும் என்பது விதி.

சமீபகாலமாக பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களான சிவக்குமார், சதாசிவம், வெங்கடேஸ்வரன் மூவரும் கட்சி கட்டுப்பாட்டை மீறி செய்து வரும் செயல் சட்டமன்றக் கட்சித் தலைவர் ஜி.கே.மணியால் கட்சியின் தலைமைக்கு கொண்டுவரப்பட்டு கட்சியின் தலைமை நிர்வாக்குழு அதனை ஒழுங்கு நடவடிக்கை குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியதில், அந்த குழு அந்த மூன்று சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வழக்கறிஞர் கே.பாலு ஆகியோரின் செயல்பாடுகள் மற்றும் தமிழக சட்டப்பேரவை சபாநாயகரை சந்தித்து சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் அவர்களை பொய்யாக கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டதாக சொன்ன செயல் ஆகியவை ஒழுங்கீனமான செயல் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியப்படுத்தியதால் அவர்கள் மீது விரிவாக விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் நால்வரும் கட்சியின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

ஒழுங்கு நடவடிக்கைக் குழு முன் அவர்கள் நால்வரும் விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டியிருப்பதால் அதுவரை கட்சித் தொண்டர்களும் மற்ற தலைவர்களும் அவர்களிடம் கட்சி சம்மந்தமாக எந்த தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். விசாரனைக் குழு அவர்கள் நால்வரையும் விசாரனைக்கு அழைத்து விளக்கம் கேட்பதற்கு முழு அதிகாரமும் நிறுவனர் மற்றும் தலைவர் கொடுத்துள்ளார் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சேலத்தில் இன்று நடைபெறுகிறது

# த.வெ.க.வின் கொள்கை விளக்க பொதுக்கூட்டம்

**சென்னை, ஜூலை 21-**

சேலத்தில் இன்று மாலை பொதுச் செயலாளர் ஆனந்த் தலைமையில் கொள்கை விளக்க முதல் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதாக தமிழக வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைமை நிலைய செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;- தமிழக வெற்றிக் கழகத்தின் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில், 5 கழக மண்டலங்கள், 120 கழக மாவட்டங்கள் மற்றும் 12,500 கிளைக் கழகங்கள் ஆகியவற்றில் கழகக் கொள்கை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று, கழகச் செயற்குழு கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அத்தீர்மானத்தின்படி, மாநில அளவிலான மாபெரும் கொள்கை விளக்க முதல் பொதுக் கூட்டம், இன்று (21.07.2025) திங்கள்கிழமை, மாலை 04.00 மணி அளவில் சேலம். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மைதானத்தில் நடைபெற உள்ளது என்பதைக் நமது வெற்றித் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகப் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தலைமையில் நடைபெற உள்ள இந்தப் பொதுக் கூட்டத்தில், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றுச் சிறப்புரையாற்ற உள்ளனர். இதில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அனைத்து நிலை நிர்வாகிகள், கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு, கழகத்தின் கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களைப் பொதுமக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் திடீரென ஒத்திவைப்பு

**சென்னை, ஜூலை 21-**

சென்னையில் நேற்று நடைபெறுவதாக இருந்த த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள த.வெ.க. வியூகம் அமைத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஆகஸ்டு 25-ந்தேதி மதுரையில் கட்சியின் 2-வது மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம், கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து விஜய் பேச இருக்கிறார்.இதற்கிடையே, மாநாடு மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்து மாவட்ட செயலாளர்களுடன் விஜய் கலந்துரையாட இருக்கிறார். இந்த கலந்துரையாடல் கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற இருந்தது.

இதற்கான அழைப்பு மாவட்ட செயலாளர்களுக்கு விடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தில், உறுப்பினர் சேர்க்கைக்கான புதிய செயலியை விஜய் அறிமுகம் செய்வார் என தெரிவிக்கப்பட்டது .இந்த நிலையில் புதிய செயலியை அறிமுகம் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் திடீரென ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. செயலியில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே அதன் அறிமுக விழா தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர்களுடனான ஆலோசனை கூட்டம் வருகிற 24-ந்தேதி நடைபெற இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## இந்தியாவில் முதல்முறையாக

# புதுவை கடற்கரை ரோந்து பணியில் முதல்முறையாக ரோபோ பயன்பாடு




**புதுச்சேரி, ஜூலை 21-**

இந்தியாவில் முதல்முறையாக புதுச்சேரி கடற்கரையில் போலீஸாருக்கு உதவியாக முதல்முறையாக ரோந்து பணியில் விரைவில் ரோபோ ஈடுபடுத்தப்படவுள்ளது. அதிகாரிகள் முன்னிலையில் செயல்விளக்கம் நடந்த நிலையில், குறைகளை களைந்தபின் நடைமுறைக்கு வரவுள்ளது.

புதுச்சேரிக்கு வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானோர் விருப்பத்துடன் இளைப்பாறுவது கடற்கரை தான். வெளியூர் மக்கள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் தங்கள் நேரத்தை செலவிட கடற்கரைச் சாலைக்குதான் முன்னுரிமை தருவர். காலை தொடங்கி இரவு வரை பலரும் தங்களுக்கு பிடித்த இடமாக கடற்கரைச் சாலையை கருதுகின்றனர்.

சுமார் 2 கி.மீ நீளமுள்ள கடற்கரை சாலையில் பெரிய கடை போலீஸார் ரோந்து செல்கின்றனர். இந்த நிலையில் போலீசாருக்கு உதவியாக நவீன ரோபோ ரோந்து பணியில் ஈடுபடுத்த காவல் துறை தலைமையகம் முடிவு செய்துள்ளது. சென்னை தனியார் நிறுவனத்துடன் இணைந்து ரோபோ உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் செயல்விளக்கம் கடற்கரை சாலையில் நடந்தது. டிஐஜி சத்தியசுந்தரம், சீனியர் எஸ்பிக்கள் கலைவாணன், நித்யா ராமகிருஷ்ணன், ஏ. கே.லால் முன்னிலையில் ரோபோ செயல்விளக்கம் தரப்பட்டது.

இந்த ரோபோவில் நவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. ரோபோ தானாகவே சென்று கண்காணிக்கும். கடற்கரையில் குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள், மது அருந்துபவர்கள், தடையை மீறி குளிப்பவர்களை படம் பிடித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் முதல்முறையாக புதுவையில் ரோந்து பணிக்கு ரோபோ பயன்படுத்தப்பட உள்ளதாக தனியார் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். இதில் உள்ள குறைபாடுகள் களையப்பட்ட பின் ரோபோ ரோந்து பணி நடைமுறைக்கு வர உள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தனர்.

# மதுரை ஆதினத்திடம் சைபர் கிரைம் போலீசார் விசாரணை



**மதுரை, ஜூலை 21-**

கார் ஏற்றிக் கொல்ல சதி என கூறிய குற்றச்சாட்டு தொடர்பாக, படுத்த படுகையில் இருக்கும் மதுரை ஆதினத்திடம் சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தினர்.

கடந்த மே மாதம், தருமபுரம் ஆதினம் ஏற்பாட்டில், சென்னை அருகே காட்டாங்கொளத்தூரில் 6வது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் பங்கேற்க, மதுரை ஆதினம் காரில் சென்றார். கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, அஜீஸ் நகர் சர்வீஸ் சாலை வழியாக ரவுண்டானாவை கார் கடந்தபோது, பின்னால் வந்த கார் மோதி விட்டு நிற்காமல் சென்றது.

இதில், தூங்கிக்கொண்டிருந்த ஆதினம் எவ்வித காயமும் இன்றி தப்பினார். தன்னை கொல்ல நடந்த சதியாக இருக்கலாம் என, அவர் சந்தேகம் தெரிவித்தார்.

மதுரை ஆதினம் பொய்யான தகவலை பரப்பியதாக சைபர் கிரைம் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. இது குறித்து, ஆதினத்திற்கு எதிராக 4 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இது தொடர்பாக, நேற்று (ஜூலை 20) தொடர்பாக, படுத்த படுக்கையில் இருக்கும் மதுரை ஆதினத்திடம் போலீசார் விசாரணை நடத்தினர். முன்னதாக ஆதினத்திடம் விசாரணை நடத்துவதற்கு, பா.ஜ.,வினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

போலீசாரை மடத்திற்கு உள்ளே அனுமதிக்காமல் பா.ஜ., வினர் மறித்தனர். மதுரை ஆதினம் விசாரணையின் போது உதவியாளர் தேவை என கோரிக்கை விடுத்தார். அதனை ஏற்க மறுத்த போலீசார், ஆதினத்திடம் விசாரணை நடத்தினர்.

## தர்மஸ்தலா கோவில் விவகாரம்:

# சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்தது கர்நாடக அரசு

**மங்களூரு, ஜூலை 21-**

தர்மஸ்தலா கோவில் விவகாரத்தில் கர்நாடக அரசு 4 ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நேற்று (ஜூலை 20) அமைத்து உத்தரவிட்டுள்ளது.

மங்களூரு அருகேயுள்ள தர்மஸ்தலா பகுதியில் மண்ணுக்குள் சுமார் 100 பெண்கள் கொன்று புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் அடுத்தடுத்து சில திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

தர்மஸ்தலாவில் அமைந்துள்ள ஸ்ரீ மஞ்சுநாதேஷ்வரர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற திருத்தலங்களுள் ஒன்றாகும். இந்த கோவில் 'ஜெயின் தர்மாதிகாரி மற்றும் பா.ஜ.க. ஆதரவுடன் மாநிலங்களவைக்கு எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வீரேந்திர ஹெக்கடேவால்' நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த கோவில் அருகேயுள்ள கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் 100-க்கும் மேற்பட்ட பெண்கள், மாணவிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும், கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு நிர்வாண நிலையில் புதைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் கர்நாடக மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

தக்ஷிண கன்னடா மாவட்டத்தின் தர்மஸ்தலாவில் 1998 - 2014 வரையிலான காலகட்டத்தில் தூய்மைப் பணியாளராக பணியாற்றிய ஒரு நபர், நிர்வாண நிலையில் இருந்த பல பெண்களின் உடல்களை மண்ணில் குழி தோண்டி புதைத்ததாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் பகிரங்கமாக புகார் அளித்துள்ளார். இதன் அடிப்படையில், தர்மஸ்தலா காவல் நிலையத்தில் கடந்த ஜூலை 4-இல் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) பதியப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இச்சம்பவத்தின் தீவிரத்தன்மையை அறிந்து இது குறித்து கர்நாடக முதல்வரை அம்மாநில வழக்குரைஞர்கள் அமைப்பினர் கடந்த வியாழக்கிழமை கூட்டாகச் சந்தித்து இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்' என்று தெரிவித்தனர். ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி வி. கோபால கௌடாவும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து, கர்நாடக அரசு 4 ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நேற்று (ஜூலை 20) அமைத்து உத்தரவிட்டுள்ளது. டி.ஜி.பி. ப்ரோனாப் மோகண்ட்டி தலைமையிலான இந்த குழுவில் காவல் துறை டிஐஜி எம். என். அனுசேத், டி.சி.பி. சௌமியலதா, எஸ்.பி ஜிதேந்திர குமார் தயாமா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இனி மேற்கண்ட வழக்கின் முழு விசாரணையை இக்குழு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 முக்கிய விஷயங்கள் குறித்து பிரதமர் பதிலளிக்க காங்கிரஸ் வலியுறுத்தியுத்தல்

**புதுடெல்லி, ஜூலை 21-**

வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரின்போது மூன்று முக்கிய விஷயங்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்துக்கு வந்து பதில் அளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்க உள்ளதை முன்னிட்டு மத்திய அரசு சார்பில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கவுரவ் கோகாய், "இந்த முறை பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டுக்கு உரையாற்றுவார் என்பதில் எங்களுக்கு முன்பை விட அதிக நம்பிக்கை உள்ளது. இந்த கூட்டத்தொடரில் மூன்று முக்கிய விஷயங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்கு வந்து பிரதமர் மோடி பதில் அளிக்க வேண்டும்.

ஒன்று, பஹல்காம், துணைநிலை ஆளுநர் இது குறித்து கூறிய விஷயங்கள். நிறைய நேரம் கடந்துவிட்டது, அரசாங்கம் அதன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும். இரண்டாவதாக, வாக்களிக்கும் உரிமை குறித்து இன்று முக்கியமான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அரசியல் கட்சிகளுடன் பேசுவதை தேர்தல் ஆணையம் தவிர்க்கிறது. அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கேள்விகளுக்கு அது விளக்கம் அளிப்பதில்லை. தனது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பிரதமர் அவையில் முன்வைப்பது அவரது கடமையாகும்.

மூன்றாவது விஷயம் சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்துடனான நமது எல்லையில் உருவாகியுள்ள புதிய நிலை பற்றியது அது. எனவே பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை பற்றி நாம் பேசுவது மிகவும் முக்கியம். எனவே, பிரதமர் மோடி அவைக்கு வந்து இந்த மூன்று விஷயங்கள் குறித்து தனது கருத்துக்களை முன்வைப்பது மிகவும் முக்கியம் என தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அமித்ஷாவின் பிடியில் இருந்து அ.தி.மு.க. மீளவே முடியாது. அவர் கொடுத்த நிர்பந்தத்தின் காரணமாக பா.ஜ.க. கூட்டணியில் சேரவேண்டிய நிர்பந்தம் அ.தி.மு.க.வுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை எடப்பாடி பழனிசாமி இதுவரை விளக்க வில்லை. தற்கொலைக்கு சமமான முடிவை அ.தி.மு.க. எடுத்திருக்கிறது.

**- செல்வப்பெருந்தகை**



வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடு கோரி யார் போராடினாலும் வாழ்த்துவோம். பூம்புகார் மாநாட்டிற்கு யார் வேண்டுமானாலும் வரலாம். மகளிர் பங்கேற்கலாம். எல்லோரும் பங்கேற்கலாம்.ஒட்டு கேட்கும் கருவி குறி த்து விசாரணை நடக்கிறது. ஒட்டு கேட்டு கருவி வைத்தது குறித்து சந்தேகம் இருக்கிறது. போலீசாரிடம் சொல்லி இருக்கிறோம்.

**- ராமதாஸ்**



'அ.தி.மு.க.,வை பா.ஜ., கபளீகரம் செய்துவிடும் , தமிழகத்தை அடகு வைத்துவிடுவார்கள்' என்று தி.மு.க.,வினர் பேசியதற்கு அவர் பதில் (ஏமாளி அல்ல என்று இ.பி.எஸ்., பேசிய கருத்து) கூறியிருக்கும் பதில் தான் அது. இதில் வேறு உள்நோக்கமும், உள் அர்த்தமும் இல்லை. எங்களின் தேசிய ஜனநாயக ஆட்சி அமையும்.

**- நயினார் நாகேந்திரன்**



இந்திய புள்ளி விவர சட்டத்தின் படி, பஞ்சாயத்து தலைவருக்கு அவரது பஞ்சாயத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அதிகாரம் உண்டு. முதல்வர் ஸ்டாலினுக்கு மட்டும் அதிகாரம் இல்லையா? காந்தி 32 ஆண்டுகளில் இந்தியாவிற்கு விடுதலை கிடைத்தது. ராமதாஸ் 45 ஆண்டுகள் போராடியும் நமக்கு விடுதலை கிடைக்கவில்லை.

**- அன்புமணி**

# சென்னை திரு.வி.க.நகர் மண்டலம் 75வது வார்டில் 11.77 கோடி மதிப்பீட்டில் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிட பணி

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்



**சென்னை,ஜூலை.21**

திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 73 மற்றும் வார்டு 75ல் அமைச்சர்.கே.சேகர்பாபு (19.07.2025) ரூ 11.77 கோடி மதிப்பீட்டில் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடம், மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-73, குக்ஸ் சாலை வாடியா நகர் பகுதியில் ரூபாய் 3.05 கோடி மதிப்பீட்டிலும், வார்டு-75, நம்மாழ்வார் பேட்டை 2ஆவது தெரு பகுதியில் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டிலும் என இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடத்திற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த நகர்ப்புற சுகாதார மையங்களில் அவசர அறை, மருத்துவ அலுவலர் அறை, மருந்தகம், ஊசிப் போடும் அறை, ஆய்வக அறை, ஆவண அறை, மருந்து இருப்பு அறை, மருந்து ஆலோசனை அறை, பதிவு அறை, பணியாளர்களின் அறை, ஆண்கள் பெண்கள் கழிவறை, காத்திருப்பு கூடம் உள்ளிட்ட வசதிகள் அமையவுள்ளன.இதனை தொடர்ந்து, வார்டு 73, புளியந்தோப்பு அம்மையம்மாள் தெரு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 6.44 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நிலைப் பள்ளிக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இப்பள்ளிக் கட்டடம் 17,569 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் கட்டப்படவுள்ளது. இதில் 19 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, இரண்டு ஆசிரியர் அறை, மேடை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளின்போது, மேயர் ஆர். பிரியா, திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணைஆணையர்கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) . பாலவாக்கம் த. விசுவநாதன், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்.ச. அம்பேத்வளவன், மண்டல அலுவலர் (பொ) ஆர்.சரவணன் கலந்து கொண்டனர்.

# பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா: டிஜிபி சங்கர் ஜிவால் பங்கேற்பு

**சென்னை,ஜூலை.21**

நேரடி தேர்வு செய்யப்பட்ட 09 பெண் மற்றும் 15 ஆண் அதிகாரிகள் உள்ளிட்ட 24 பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்கள் 22.07.2024 அன்று அவர்களது ஓராண்டு அடிப்படை பயிற்சிக்கு தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் அறிக்கை செய்து கொண்டனர்.

பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்களில,; ஒருவர் முனைவர் பட்டமும் 15 பேர் பொறியியல் பட்டமும் ஒருவர் சித்தமருத்துவத்தில் பட்டமும் இருவர் முதுநிலை பட்டமும் 04 பேர் இளநிலை பட்டமும் பெற்றுள்ளனர்.

இவர்களில் 10 நபர்கள்; பல்வேறு அரசு துறைகளிலும் ஒருவர் தனியார் நிறுவனத்திலும் பணிபுரிந்த முன் அனுபவம்; பெற்றவர்களாகவும் மீதமுள்ள 13 நபர்கள் முதல்; பணியில் இணைந்துள்ளவர்களாகவும் உள்ளனர்;.

உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு உள்ளிட்ட 52 வார கால இப்பயிற்சியில், பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கு தேவையான சட்ட அறிவு, அறிவியல் சார் புலனாய்வு திறன், நவீன மற்றும் கணினிமயமாக்கப்பட்ட மாநில காவல் துறை, அதன் மேம்படுத்தப்பட்ட திறன்கள், உள்நாட்டு பாதுகாப்பு, நுண்ணறிவு, சமுதாய காவல் பணி, தலைமை பண்பு, செய்தி தொடர்பு திறன், சட்ட-அமலாக்க திறன், இணையவழி குற்றங்கள் பல பயிற்சிகள் திறமை வாய்ந்த துறைசார் நிபுணர்களைக் கொண்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், வழக்கமான கவாத்து பயிற்சி, 10 நாட்கள் வனப்பகுதியில் தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படையினருடனான மலையேறும் பயிற்சி, நீச்சல், கராத்தே, யோகா, நவீன ஆயுதங்களை கையாளுதல், துப்பாக்கி சுடுதல் மற்றும் வாகனங்கள் ஓட்டுதல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், ஜல்லிக்கட்டு மற்றும் கார்த்திகை தீபம் போன்ற பாதுகாப்பு பணிகளின்போது நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு களபயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

18.07.2025-ம் தேதி அன்று நடைபெற்ற பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக தலைமையுரை நிகழ்த்தினார். காவல்துறை தலைமை இயக்குநர்ங்கர் ஜிவால், துணை காவல் கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு மாரியாதையினை ஏற்று, பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்கி, விழா சிறப்புரையாற்றினார்.

மேலும், ஒட்டுமொத்த பயிற்சியில் சிறந்து விளங்கிய பயிற்சி அதிகாரிகளுக்கு காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், வீரவாள் மற்றும் கோப்பை பரிசளிக்கப்பட்டது.

காவல்துறை இயக்குநர், பயிற்சி, (பொறுப்பு) இயக்குநர், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம் சந்தீப் ராய் ராத்தோர், வரவேற்புரை வழங்கி பயிற்சி அறிக்கை வாசித்தார். தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம், கூடுதல் இயக்குநர் தேன்மொழி, நன்றியுரை வழங்கினார். சுரேஷ்குமார், துணை இயக்குநர், பயிற்சி மற்றும் முனைவர். வு. செந்தில் குமார், இ.கா.ப., துணை இயக்குநர், நிர்வாகம் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்தார்கள். காவல்துறை இயக்குநர்கள், காவல்துறை கூடுதல் இயக்குநர்கள், பிற துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பயிற்சி துணை காவல் கண்காணிப்பாளர்களின் குடும்பத்தாரும் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார்கள்

# திமுகவுக்கு நிபந்தனையின்றி ஆதரவு:தந்தை பெரியார் திமுக அறிவிப்பு

**சென்னை, ஜூலை- 21**

வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிப்போம் என்று தந்தை பெரியார் திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

இந்த கட்சியின தலைவர் பிரபு தாசன் பண்டிதன், கருப்பு சிவப்புக் வண்ணங்களுக்கு இடையே பெரியாரின் உருவம் பொறித்த கட்சியின் புதிய கொடியை சென்னையில் அறிமுகப்படுத்தினார்.அப்போது அவர் கூறுகையில்

கருஞ்சிறுத்தையாக செயல்பட்டு வந்த நாங்கள்,தந்தை பெரியார் திராவிட முன்னேற்றக் கழகமாக மாறிஇருக்கிறோம். கருஞ்சிறுத்தையாக இருந்த போதே திமுகவின் கூட்டணிக் கட்சியாக முதலமைச்சர் ஸ்டாலின் எங்களை அங்கீகரித்தார். தற்போது தந்தை பெரியார் திராவிட முன்னேற்ற கழகமாக மாறிஇருக்கிறோம். தந்தை பெரியார் கொள்கையில் லாமல் எந்த அமைப்பும் இல்லை என்பதால் பெரியார் பெயரை இணைத்து இருக்கிறோம். வரும் சட்டமன்றத் தேர்தலிலும் தி மு க கூட்டணிக்கு எங்களது ஆதரவு தொடரும். அந்த ஆதரவு நிபந்தனையற்ற தாக அமையும். தமிழகத்தில் பிஜேபியையும் அதன் பின்னணியில் வரும் எந்த கட்சியாக இருந்தாலும் அதனை தோற்கடிக்க வேண்டும்.நடிகர் விஜய்யின் தவெகவும் பிஜேபியை பாசிசம் என்று சொன்னாலும் அதன் மறு உருவம் தான் என்றும் இல்லையென்றால் பாசிச பாஜக அவருக்கு துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பை வழங்கி இருக்காது என்றார் அவர்.

# அம்பத்தூர் வங்கியில் பயங்கர தீவிபத்து

**சென்னை ஜூலை 21-**

அம்பத்தூரில் உள்ள வங்கியில் நேற்று அதிகாலை பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. இதில், முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமானது. இதுகுறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். அம்பத்தூர் பேருந்து நிலையத்தின் பின்புறம் உள்ள ஒரு வணிக வளாகத்தில் பிரபல தனியார் வங்கி இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் மாலை, வேலை முடிந்ததும் ஊழியர்கள், வங்கியை பூட்டி விட்டு சென்றனர். வங்கிக்கு, இரவு நேர காவலாளி ஒருவர் பணியில் இருந்து வருகிறார். இந்நிலையில் நேற்று முந்தினம் அதிகாலை 2 மணிக்கு வங்கியில் இருந்து கரும்புகை வெளியேறியது. இதை பார்த்த காவலாளி, உடனே போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில், அம்பத்தூர் போலீசார் மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.அதற்குள் தீ வங்கி முழுவதும் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது. ஜன்னல் கண்ணாடிகள், வங்கி உள்ளே இருந்த கண்ணாடி கதவுகள் உடைந்து சிதறியது. தீயணைப்பு வீரர்கள் சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். விரைந்து செயல்பட்டதால், மற்ற கட்டிடங்களுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது. இந்த தீ விபத்தில் வங்கியில் உள்ள ஆவணங்கள் மற்றும் இருக்கைகள், மேஜைகள் எரிந்து சேதமானது. இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து, மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு காரணமா என விசாரித்து வருகின்றனர். அதிகாலையில் தீவிபத்து ஏற்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.



சென்னை கோடம்பாக்கம் மண்டலம் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சிஐடி நகர் பிரதான சாலையில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.164.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேம்பால பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், துணை ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி, மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டனர்.

# சுற்றுலா வளர்ச்சி மேம்பாடு மற்றும் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

## அமைச்சர் இரா.ராஜேந்தரன் தலைமையில் நடந்தது



**சென்னை,ஜூலை21**

சுற்றுலாத்துறை அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமையில் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், சுற்றுலாத் துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாடு மற்றும் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் சுற்றுலா வளர்ச்சிப் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், ற்றுலாத்துறை அமைச்சர் அறிவிப்புகள், முத்திரைத் திட்டங்கள், பிற அரசுத்துறைகளிடமிருந்து பெற வேண்டிய திட்டப்பணிகள் குறித்த தடையின்மை சன்றுகள் பெறுவது, தற்போது நடைப்பெற்றுக் கொண்டுயிருக்கும் பணிகள் குறித்தும், புதிய முன்மொழிவுகள் குறித்தும் மற்றும் முடிவுற்ற பணிகள் தற்போதைய நிலை பயண்பாடுகள் குறித்தும், திறப்பு விழாவிற்கு தயாராக இருக்கும் நிறைவடைந்த பணிகளான,

தென்கசி மாவட்டம் குன்டாறு அனையில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியை பல்வேறு சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல், புதுக்கோட்டை மாவட்டம் முத்துகூடா கடற்கரை மேம்பாட்டுப் பணிகள், திருவள்ளூவர் மாவட்டம் பூண்டி அணை சுற்றுலா மேம்பாட்டு பணிகள், மதுரை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு பிரிவு 2ல் அதிநவீன வசதிகள் கூடிய தங்கும் விடுதி கட்டடம் போன்ற பணிகள் குறித்தும், சுற்றுலாத் தலங்களில் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்தும் சுற்றுலாத்துறை உதவி இயக்குநர், பொறியாளர்கள் மற்றும் அனைத்து சுற்றுலா அலுவலர்களுடனும் கலந்துரையாடல் செய்து, சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முதற்கொண்டு அனைத்து வகையான சுற்றுலா சேவைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ள படுகிறதா என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

# திருமங்கலம் பகுதியில் விலைஉயர்ந்த காரை திருடியவர் கைது

**சென்னை ஜூலை 21-**

சென்னை, அண்ணாநகர் மேற்கு, 16வது மெயின்ரோடு, கதிரவன் காலனியில் எத்திராஜ் ரத்தினம், என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த மாதம் 10. ந் தேதி அன்று அவரது சொகுசு காரை வீட்டின் எதிரே நிறுத்திவைத்து விட்டு மறுநாள் வந்து பார்த்த போது அவரது கார் திருடுபோனது தெரியவந்தது. இது குறித்து எத்திராஜ் ரத்தினம் திருமங்கலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன் மேற்படி காரை திருடிச் சென்ற எதிரி சத்யேந்திர சிங் ஷெகாவத், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன்பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சத்யேந்திரசிங் கார் ஷோரூம்களுக்கு சர்வீஸ் செய்வது போல சென்று நோட்டமிட்டு, அங்கிருக்கும் விலையுயர்ந்த கார்களில் ஜிபிஎஸ். கருவி பொருத்தி, அந்த ஜிபிஎஸ் கருவி மூலம் கார்களின் இருப்பிடத்தை தொடர்ந்து நோட்டமிட்டு, வீட்டிற்கு வெளியே கார்கள் நிற்பதை அறிந்து அங்கு சென்று, கள்ளச்சாவிகளை பயன்படுத்தி, கார்களை திருடிச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளதும், இதே போல கர்நாடகா உட்பட பல மாநிலங்களில் கார்களை திருடி இராஜஸ்தான் கொண்டு சென்றுள்ளது தெரியவந்தது. மேற்படி திருடப்பட்ட புகார்தாரர் காரை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிரி சத்யேந்திர சிங் ஷெகாவத்திடம் போலீசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# கொடுங்கையூர் பகுதியில் 40 சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் கைது

**சென்னை ஜூலை 21-**

சென்னை, கொடுங்கையூர், ஜெய்பாலாஜி நகர் பகுதியில் வசித்து வரும் எட்வர்ட், என்பவர் கடந்த 18.ந் தேதி அன்று இரவு அவரது மகன் சைக்கிளை வீட்டின் காம்பவுண்டிற்குள் நிறுத்தி வைத்து விட்டு, சிறிது நேரம் கழித்து வந்து பார்த்த போது, சைக்கிள் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து எட்வர்ட் கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இதே போல் சைக்கிள்கள் காணாமல் போனது குறித்து மேலும் புகார்கள் தாக்கலான நிலையில் காவல் ஆணையர் உத்தரவின்பேரில் உயரதிகாரிகள் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர்களுக்கு வழங்கிய அறிவுரையின்பேரில், நடுத்தர குடும்பத்தினர் பல்வேறு பணிகளுக்கு செல்லவும், அத்தியாவசிய பயன்பாடுகளுக்கும், படிக்கும் குழந்தைகள் பள்ளி, கல்லூரி மற்றும் டியூசன் வகுப்புகளுக்கு செல்வதற்கும், உடற்பயிற்சி, சைக்கிள் ஓட்டும் பயிற்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் சைக்கிள்கள் திருட்டுபோவது குறித்து தீவிர கண்காணிப்பு செய்து, சைக்கிள் திருடுபவர்களை கண்டறிந்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட சைக்கிள் திருடுபோன சம்பவயிடத்திலிருந்து கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, தொடர்ச்சியான கண்காணிப்பு கேமரா பதிவுகளைகொண்டும் மேற்படி சைக்கிள் திருட்டு வழக்கில் தொடர்புடைய தாமோதரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கொடுங்கையூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் திருடு போன 6 சைக்கிள்கள் உட்பட சென்னையில் பல்வேறு பகுதிகளில் திருடப்பட்ட 40 சைக்கிள்கள் மீட்கப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி தாமோதரன், கொடுங்கையூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகள் முன்பு மற்றும் பல்வேறு பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விலைமதிப்புள்ள சைக்கிள்களை நோட்டமிட்டு திருடியுள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி தாமோதரன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# மதுரவாயலில் டிரைவருக்கு அரிவாள் வெட்டு

**சென்னை ஜூலை 21-**

மதுரவாயல் பகுதியை சேர்ந்தவர் முருகன் (40). இவர் டிரைவர் வேலை பார்த்து வருகிறார்.இவர் நேற்று முன் தினம் இரவு தனது நண்பருடன் அதே பகுதியி மேட்டுகுப்பம் சாலையில் உள்ள மதுகடைக்கு சென்றார்.அப்போது அங்கிருந்த 6 பேர் கொண்டகும்பல் திடிரென முருகனை வழிமறித்து தகராறில் ஈடுபட்டு மறைத்து வைத்திருந்த அரிவாளால் வெட்டினர்.இதை கண்டு அதிர்ச்சி அடைந்த முருகனின் நண்பர் அங்கிருந்து ஒட்டம் பிடித்து தப்பினார். அரிவாள் வெட்டில் பலத்த காயம் அடைந்த முருகன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.மதுபாரில் ரகளையில் ஈடுப்பட்ட கும்பலை அங்கிருந்த ஊழியர்கள் வெளியேற்றி உள்ளனர்.இதனால் ஆத்திரம் அடைந்த அவர்கள் அங்கு வந்த முருகனை அரிவாளால் வெட்டி தப்பி சென்று இருப்பது தெரியவந்தது. இதுகுறித்து மதுரவாயல் போலிசார் வழக்கு பதிவு செய்துவிசாரணை செய்து வருகின்றனர்.

# வியாசர்பாடி பகுதியில் கணவன் மனைவி மீது கத்தி குத்து: ஒருவர் கைது

**சென்னை ஜூலை 21-**

சென்னை, வியாசர்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வசித்து வரும் 22 வயது பெண், தனது வீட்டினருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த கௌதம் என்பவர், அப்பெண்ணை அழைத்து, தகாத வார்த்தைகள் பேசி, வீண்தகராறு செய்துள்ளார். இது குறித்து அப்பெண் தனது கணவரிடம் கூறியதின்பேரில், அப்பெண்ணின் கணவர், மேற்படி கௌதமிடம், எதற்காக தகாத வார்த்தைகள் பேசினாய்? என்று கேட்டபோது, கௌதம், அப்பெண்ணின் கணவரை கத்தியால் தாக்கியுள்ளார். இது குறித்து மேற்படி 22 வயது பெண், வியாசர்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கௌதம், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கௌதம் என்பவர் மீது ஏற்கனவே கொலைமுயற்சி உட்பட 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி கௌதம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# சைதாப்பேட்டை பகுதியில் இருவரை தாக்கி, பணம் பறித்த வழக்கில் ஒருவர் கைது

**சென்னை ஜூலை 21-**

சென்னை, சைதாப்பேட்டை பகுதியில் திவாகர், என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 17.ந் தேதி அன்று இரவு, மேற்படி தனது வீட்டினருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது , அங்கு தெரிந்த ஒரு சிறுவன் புகைபிடித்து கொண்டிருப்பதை கண்டு,அவரிடம் ஏன் சிறுவயதில் சிகரெட் புகைபிடிக்கிறாய்? என்று கேட்டு, அறிவுரை கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுள்ளார்.

**கைது**

பின்னர் சிறிது நேரம் கழித்து, திவாகர், தனது நண்பர்களான சதீஷ், தட்சா ஆகியோருடன் சைதாப்பேட்டை, சலவையர் காலனியில் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த மேற்படி சிறுவன் மற்றும் அவருடைய நண்பர்கள் கௌதம் உட்பட மொத்தம் 4 பேரும் சேர்ந்து, திவாகரிடம் வீண் தகராறு செய்து, அவர் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.500/- பறித்துக் கொண்டு, திவாகரை கத்தியால் தாக்கிவிட்டு, திவாகரின் நண்பர் சதீஷை பீர் பாட்டிலால் தலையில் தாக்கி, கொலைமிரட்டல் விடுத்து, நால்வரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர். தாக்குதலில் இரத்த காயமடைந்த திவாகர் மற்றும் சதிஷ் ஆகிய இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, திவாகர் கொடுத்த புகாரின்பேரில், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். சைதாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கௌதம், என்பவரை கைது செய்தனர்.

மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 17 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கௌதம் மீது ஏற்கனவே 1 கொலைமுயற்சி உட்பட 4 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 2 தலைமறைவு எதிரிகளை காவல்குழுவினர் தேடிவருகின்றனர்.

# இருசக்கர வாகனத்தை திருட முயற்சி: ஒருவர் கைது

**சென்னை ஜூலை 21-**

சென்னை, அடையாறு, கஸ்தூரிபாய் நகரைச் சேர்ந்த துரை, என்பவர் அடையாறு, மல்லிகைப்பூ நகரில் சுமார் 20 வருடங்களாக மெக்கானிக் கடை நடத்தி வருவதாகவும், நேற்று முன் தினம் இரவு மெக்கானிக் கடையை பூட்டிவிட்டு, மறுநாள் அதிகாலை, மல்லிகைபூ நகரில் உள்ள நாய்களுக்கு வழக்கம் போல உணவு கொடுத்து கொண்டிருந்தபோது, அவரது மெக்கானிக் கடை வெளியே நிறுத்தியிருந்த யமஹா இருசக்கர வாகனத்தை ஒரு நபர் உடைத்து திருடும் சத்தம் கேட்டு துரை சத்தம் போட்டுக் கொண்டே அருகில் சென்றபோது, அந்த நபர் தப்பியோடவே, துரை துரத்திச் சென்று பொதுமக்கள் உதவியுடன் அந்த நபரை மடக்கிப் பிடித்ததாகவும், துரை பிடிபட்ட நபரை அடையாறு காவல் நிலைய குற்றப்பிரிவில் ஒப்படைத்து புகார் கொடுத்தார். , பிடிபட்ட நபர் அருண், என்பதும், புகார்தாரரின் மெக்கானிக் கடை முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தின் லாக்கை உடைத்து திருட முயன்ற போது, பிடிபட்டதும் தெரியவந்தது. எதிரி அருண் என்பவரை கைது செய்தனர்.



ஈரோடு பவானி சாலையில் உள்ள வ உ சி பூங்காவின் சுற்று சுவர் சுமார் 15 அடி தூரத்திற்கு இடிந்துவிழுந்தது.இதைமாநகராட்சிஆணையாளர்ஹர்பித்ஜெயின்உத்தரவுப்படிசீரமைக்கும் பணி இளநிலை பொறியாளர் சரண் சிங் தலைமையில் நடைபெற்ற போது எடுத்த படம்

# யு.ஆர்.சி. சின்னுசாமி கவுண்டர் கோப்பைக்கான சதுரங்கப் போட்டி



**ஈரோடு ஜூலை 21-**

யு ஆர் சி பழனியம்மாள் பதின்ம மேல்நிலைப் பள்ளியில் நேற்று, ஈரோடு மாவட்ட சதுரங்க வட்டச்செயலாளர் டாக்டர் எஸ்.ரமேஷ் ஏற்பாடு செய்த சதுரங்கப்போட்டி நடைபெற்றது இந்நிகழ்ச்சியை யுஆர்சி கல்வி மற்றும் தர்ம அறக்கட்ளையின் தலைவர் . சி. துளசியம்மாள் தலைமையில். அறக்கட்டளையின் துணைத்தலைவர் . யு.ஆர்.சி. கனகசபாபதி முன்னிலை நடைபெற்றது யு.ஆர்.சி பள்ளித் தாளாளர் க.சரஸ்வதி விழாவினை துவக்கி வைத்து பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இப்போட்டியின் சிறப்பு விருந்தினராக தமிழ் திரைப்பட இயக்குநர் தாரிணி கோமல் பங்கேற்று பரிசு வழங்கினார். இப்போட்டியில் 382 குழந்தைகள் 07, 09, 011, 013, 015, மற்றும் பொதுப்பிரிவு மாணவ, மாணவியர்கள் தனித்தனியாக 11 வகைப் பிரிவுக்கான போட்டிகளில் பங்கேற்றனர் மாணவர்களுக்கான முதல் 20 இடங்களுக்கான கோப்பைகளும், மாணவிகளுக்கான முதல் 15 இடங்களுக்கான கோப்பைகளும், மொத்தமாக 190 கோப்பைகள் வழங்கப்பட்டது. மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பதங்கங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளியின் முதல்வர். நிர்வாக அலுவலர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் வாழ்வியல் பயிலரங்கம்

**ஈரோடு ஜூலை 21-**

கோவை மாவட்டம் ஆனைமலைஸ்ரீ சத்யேந்திர சித்தர் பீடம் மூலிகை ஆராய்ச்சி மையம்சித்தர்கள் வழியில் விதியை மாற்றுவோம் என்ற தலைப்பில் சித்தர் வழியில்- வாழ்வியல் பயிலரங்கம் சென்னை விருதுநகர் திருச்சி நாமக்கல் மதுரை தேனி கோவை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வந்தது தொடர்ந்து நேற்று ஈரோட்டில் நடைபெற்றது

இதில் சித்தர்கள் திருஉருவப்படத்திற்கு பல்வேறு மலர்களால் அலங்காரங்கள் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டு ஒரு நாள் பயிலரங்கத்தை மூலிகை சித்தர் தலைமை தாங்கி நடத்தினார். இதில் இதில் யோகா மருத்துவம் யான மருத்துவம் இயற்கை மருத்துவம் உணவு மருத்துவம் காய்கறி மருத்துவம் வாஸ்ய மருத்துவம்ஜல மருத்துவம் முத்திரைகள் மூச்சுப் பயிற்சி வர்மா கலை உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளித்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார் தொடர்ந்து மூலிகை சித்தர் கூறுகையில் சித்தர்கள் வாழ்வில் நோய் நொடி இனறி வாழ பல்வேறு வழிமுறைகளையும் பயிற்சிகளையும் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள் இவற்றை முறையாக பயின்று செய்து வருவதன் மூலம் நோயற்ற வாழ்வுவை நாம் அடையலாம் மேலும் நம் தமிழ் கலாச்சாரப்படி உணவுகள் உண்பதன் மூலமும் மூலிகை மருந்துகளை பயன்படுத்துவதன் மூலமும் நல்ல உடல் ஆரோக்கியம் பெறலாம் என்றும் கூறினார்



# திருவாரூர் மாவட்டத்தில் மின்னணு பயிர் கணக்கீடு பணிக்கு ஒப்பந்த பணியாளர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது

## கலெக்டர் மோகனச்சந்திரன் தகவல்

**திருவாரூர்,ஜூலை.21-**

திருவாரூர் மாவட்டத்தில் மின்னனு பயிர் கணக்கீடு பணியானது 2024ம் ஆண்டு ரபி பருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இப்பயிர் கணக்கீடானது விவசாயிகளின் விளைநிலங்களில் பயிர் சர்வே எண் உட்பிரிவு பாசன முறை உள்ளிட்ட விபரங்களை புகைப்படத்துடன் கூடிய செயலி மூலம் இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது. ஆண்டிற்கு மூன்று முறை கரீப் ரபி மற்றும் கோடைப் பருவங்களில் மின்னனு பயிர் கணக்கீடு மேற்கொள்ளப்படுகிறது.மாவட்டத்தில் நடப்பாண்டு 2025 -26 கரீப் ரபி மற்றும் கோடைப்பருவத்திற்கு மின்னனு பயிர் கணக்கீடு பணியானது ஒப்பந்த பணியாளர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. ஒப்பந்த பணியாளர் நிறுவனம் மாவட்ட அளவிலான தேர்வுக்குழு மூலம் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. விருப்பமுள்ள நிறுவனங்கள் விரிவான விபரங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வேளாண்மை பட்டதாரி அல்லது பட்டிய வேளாண்மை படித்தவர் அல்லது இதர பட்டப்படிப்பு படித்தவர்கள் மேலும் இணையதள ஆண்ட்ராய்டு செயலிலை உபயோகிக்க தெரிந்தவர்களாக உள்ளவர்கள் இதில் பங்கேற்கலாம். ஒப்பந்த பணியாளர் நிறுவனம் மேலேகுறிப்பிட்ட பணியார்களை தேர்வு செய்ய வேண்டும்.அந்தெந்த கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களை தேர்வு செய்ய வேண்டும்.திருவாரூர் மாவட்டத்திலுள்ள மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 562 ஆகும்.இதிலுள்ள சர்வே எண்களை பதிவு மேற்கொள்ளுதல் அடிப்படையில் ஒரு சர்வே எண்ணுக்கு ரூ.20 வழங்கப்படும். 2 சதவீதம் சேவை வரி உள்பட மேற்கண்ட தொகை வழங் கப் ப டும்.இப் ப ணியினை விரைவில் முழு சாதனை அடைந்திட வேண்டும்.கலெக்டர் தலைமையிலான குழு ஒப்பந்த பணியாளர் நிறுவனத்தினை தேர்வு செய் யும்.தேர்ந் தெ டுக் கப்பட்ட நிறுவன பணியாளர்கள் வரும் ஆகஸ்ட் 1ந்தேதி முதல் பணியினை தொடங்க வேண்டும்.இதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் வரும் 24ந்தேதி-க்குள் விண்ணப்பத்தினை பதிவு தபாலில் வேளாண்மை இணை இயக்குநர் அவலுவலகத்திற்கு அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.வரும் 25ந் தேதியன்று கலெக்டர் தலைமையிலான தேர்வுகுழு தேர்வு செய்யும். 562 வருவாய் கிராமங்களுக்கும் ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு நபர் வீதம் 562 பணியாளர்களை தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் தேர்ந்தெடுத்து பட்டியல் தரவேண் டும்.இப் ப ணி யினை எவ்வித தொய்வும் இன்றி உரிய பயிர் பருவ காலத்தில் செய்து முடித்து கொடுக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
C3, Private industrial Estate,
sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

நாட்டுக்கு சுதந்திரம்
கிடைத்தது நமக்கு
பெருமை
நாட்டை சுத்தமாக
வைப்பது நமது கடமை

நீலகிரி மாவட்டத்தில்

# அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்: சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையில் நடைபெற்றது



**ஊட்டி.ஜூலை.21-**

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் (வேடச்சந்தூர்) , தலைமையில், குழு உறுப்பினர்கள் எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி) , பி.ஆர்.ஜி.அருண்குமார் (கவுண்டம்பாளையம்) , இராம.கருமாணிக்கம் (திருவாடணை) , மா.சின்னதுரை (கந்தர்வகோட்டை) , எஸ்.சுதர்சனம் (மாதவரம்), , சேவூர் எஸ்.இராமச்சந்திரன் (ஆரணி) , எஸ்.பி.வெங்கடேஸ்வரன் (தருமபுரி) , முதன்மை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் , உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ் , கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்.ஜெயசீலன் , பா.சுப்பிரமணியம் (கூடுதல் செயலாளர்), சு.பாலகிருஷ்ணன் (துணைச்செயலாளர்) , கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா ஆகியோர்கள் முன்னிலையில் அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் ; தெரிவித்தாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ஒவ்வொரு வருடமும் சில முக்கிய துறைகளை தேர்ந்தெடுத்து அந்த துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்யப்படும். அதனடிப்படையில், இவ்வாண்டு நீலகிரி மாவட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, சிறைசாலைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் (உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, இயற்கை வளங்கள் துறை, எரிசக்தித்துறை, நெடுஞ்சாலைத் துறை, கூட்டுறவுத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, வனத்துறை உள்ளிட்ட 10 துறைகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களில் இன்றைய தினம் ஆய்வுப் பணியினை இக்குழு மேற்கொண்டுள்ளது.

மதிப்பீட்டுக்குழு என்பது தமிழ்நாடு சட்டமன்றத்தால் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்ட ஒரு குழுவாகும். இக்குழுவின் பணி தமிழ்நாடு அரசின் பட்ஜெட் அறிவிப்பின்படி ஒவ்வொரு அரசு துறைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கான நிதி முறையாக செலவு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது குறித்து கள ஆய்வு செய்யும் பணியினை மதிப்பீட்டு குழு மேற்கொண்டு வருகிறது என தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் ; தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர்கள் கௌதம் (உதகை), வெங்கடேஷ்பிரபு (கூடலூர்) கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலாமேரி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.பாலகிருஷ்ணன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், தேசிய நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் குழந்தைராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், நகராட்சி ஆணையாளர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்ட பொதுமக்கள் குறைதீர் கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில்பணிபுரியும்அனைத்துத்துறைஅரசுஅலுவலர்களுக்கானமருத்துவபரிசோதனை முகாம் நடைபெறுவதை கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்.

# திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனம் அருளாட்சிக்குட்பட்ட அக்னீஸ்வர சுவாமி திருக்கோயிலில் மண்டலாபிஷேக நிறைவு விழா

## திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம்



**நாகப்பட்டினம்,ஜூலை.21-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் அக்னீஸ்வர சாமி திருக்கோயிலில் மண்டலாபிஷேக நிறைவு நாளை ஒட்டி 1008- சங்காபிஷேகம் ஞாயிற்று கிழமை நடைபெற்றது.

திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனத்திற்கு சொந்தமான

ஸ்ரீ கருந்தாழ்குழலி அம்பாள் சமேத அக்னீஸ்வர சுவாமி திருக்கோயிலில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் கடந்த ஜூன் மாதம் 5-ம் தேதி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 48-வது மண்டலபிஷேகம் பூர்த்தி நாளையொட்டி

18 - ஆம் தேதி வெள்ளிக்கிழமை பூர்வாங்க பூஜைகளுடன் தொடங்கி 19- ஆம் தேதி சனிக்கிழமை மாலையில் முதல் இரண்டு கால யாக சால பூஜைகளுடன் 20- ஆம் தேதி காலை மண்டலபிஷேக பூர்த்தி விழா திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் ஆலயத்தில் மூலவர் அக்னீஸ்வர சுவாமிக்கு 1008- சங்காபிஷேகமும் சூலிகாம்பிகை அம்பாளுக்கு 1008- கலசபிஷேகமும் நடைபெற்றது.

தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கும் பூஜைகள் நடைபெற்றது, பின்னர் மகா தீபாராதனை காட்டப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆதீன இளவரசு ஸ்ரீ அஜபா நடேஸ்வர சுவாமிகள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) சிவஞானம் பொருளாளர் பரமானந்தம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# கே.கே.பி.அன்கோவின் நிர்வாக இயக்குனர் அருண்குமார் பாலுசாமிக்கு சிறப்பான பங்களிப்பிற்கான விருது



**ஈரோடு: ஜூலை 21-**

பிஎன்ஐ ரீஜின் அமைப்பின் சார்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், அருண்குமார் பாலுசாமி, தனது சிறப்பான வணிகப் பங்களிப்பிற்காகவும், 2000 பரிந்துரைகள் மற்றும் 800 பார்வையாளர்களை வழங்கியதற்காகவும், சுமார் 120 கோடி ரூபாய் மதிப்பிலான வணிகத்தை ஈட்டியதற்காகவும் இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் விழா, மகேஷ் பிவி கிரி மற்றும் ஆயுஷ் பன்ஸால் ஆகியோரால் இணைந்து வழங்கப்பட்டது. அருண்குமார் பாலுசாமிக்கு வழங்கப்பட்ட இந்த விருது, அவரது கடின உழைப்பு மற்றும் வணிகத் திறமைக்கு கிடைத்த அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது. அமைப்பில் இவரது பங்களிப்பு மற்ற உறுப்பினர்களுக்கும் ஒரு உத்வேகமாக அமைந்துள்ளது.



திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தின் செயல்பாடுகளையும், பேருந்துகளின் இயக்கங்களையும், பயணிகள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உணவகங்கள் உள்ளிட்ட கடைகள் சிறப்பான முறையில் இயங்கி வருவதையும் அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பயணியர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், கலெக்டர் வே.சரவணன், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மண்டல பொதுமேலாளர் சதீஷ்குமார் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட

# இந்திய மூத்த வீரர்கள் மறுப்பு: லெஜெண்ட்ஸ் கிரிக்கெட் ரத்து



**மும்பை, ஜூலை 21-**

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற மூத்த வீரர்கள் பங்கேற்கும் லெஜெண்ட்ஸ் கிரிக்கெட் ஆட்டம் ரத்தாகியுள்ளது.

**இந்தியா சாம்பியன்ஸ்...**

லெஜெண்ட்ஸ் உலக சாம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடர் கடந்த ஜூன் 18-ஆம் தேதி ஆரம்பித்தது. ஆகஸ்ட் 2-இல் இறுதி ஆட்டம் நடைபெற உள்ளது. யுவராஜ் சிங் தலைமையிலான இந்திய மூத்த வீரர்களின் 'இந்தியா சாம்பியன்ஸ்' அணியில், ஷிகர் தவான், ஹர்பஜன் சிங், சுரேஷ் ரெய்னா, இர்பான் பதான், யூசுப் பதான், ராபின் உத்தப்பா, அம்பத்தி ராயுடு, பியூஷ் சாவ்லா, ஸ்டூவார்ட் பின்னி, வருண் ஆரோன், வினய் குமார், அபிமன்யு மிதுன், சித்தார்த் கௌல், குர்க்கீரத் மான் ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**பாகிஸ்தானுடன்...**

இந்தநிலையில், லெஜெண்ட்ஸ் உலக சாம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை (ஜூலை 20) பர்மிங்ஹாமில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. இந்த ஆட்டத்தில் இந்தியா சாம்பியன்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த ஷிகர் தவான், சுரேஷ் ரெய்னா உள்ளிட்ட சில முக்கிய வீரர்கள் விலகினர்.

**தொடர் ரத்து...**

ஜம்மு காஷ்மீரின் முக்கிய சுற்றுலா தலமான பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தானே காரணம் என்று குற்றஞ்சாட்டி இந்திய மூத்த வீரர்கள் பாகிஸ்தானுக்கு எதிராக கிரிக்கெட் விளையாட மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. இதனால் இந்த ஆட்டம் ரத்தாகியுள்ளது.

# மீண்டும் விபத்தில் சிக்கிய நடிகர் அஜித்குமாரின் கார்

**ரோம், ஜூலை 21-**

ஜிடி 4 கார் பந்தயத்தில் நடிகர் அஜித் குமார் ஓட்டிச் சென்ற கார் மீண்டும் விபத்தில் சிக்கியது.

இத்தாலியில் ஜிடி 4 கார் பந்தயம் நடைபெற்று வருகிறது. இதில் நடிகர் அஜித் குமாரும் பங்கேற்றார். இந்த கார் பந்தயத்தில் அஜித் குமார் ஓட்டிச்சென்ற கார் மீண்டும் விபத்தில் சிக்கியது. பந்தயத்தில் முன்னால் சென்ற கார் திடீரென டிராக்கின் குறுக்கே நின்றதால் அதன் மீது அஜித்தின் கார் மோதியது. விபத்தில் அஜித் காரின் இடதுபுற முன்பகுதி உடைந்து சேதமடைந்தது.

இருப்பினும் இதில் காரில் இருந்த அஜித்திற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை எனத் தகவல் தெரியவந்துள்ளது.

கிருஷ்ணகிரி அருகே

# அடுத்தடுத்து வாகனங்கள் மோதி விபத்து: 4 பேர் பலி

**கிருஷ்ணகிரி, ஜூலை 21-**

கிருஷ்ணகிரி அருகே வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்ட விபத்தில் 4 பேர் பலியாகினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சிக்காரி மேடு என்னும் இடத்தில் சரக்கு வாகனங்கள், அரசு பேருந்து, கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்ட விபத்தில் 4 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்துள்ளனர்.

தகவல் அறிந்த கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ச.தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை நிகழ்விடத்திற்கு விரைந்துள்ளனர்.

# தமிழ்நாட்டின் மானம் காக்க களம் புகுவோம்: உதயநிதி ஸ்டாலின்



**சென்னை, ஜூலை 21-**

தமிழ்நாட்டின் மானம் காக்க களம் புகுவோம் - பாசிசத்தை நொறுக்குவோம் என உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தமிழர்களை உயர்த்தும் திராவிட இயக்கத் தத்துவங்களை அடுத்தடுத்து வரும் இளம் தலைமுறையின் இரத்த அணுக்களில் ஏற்றும் கொள்கைப் பாசறையாம் தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாள் இன்று. மதுரை ஜான்சி ராணி பூங்காவில் பூத்த நம் இளைஞரணி, 46-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டலில் நம்முடைய முதல்-அமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட இளைஞரணி எனும் தீரர் படையின் இன்றைய செயலாளராகப் பணியாற்றுவதை எண்ணி பெருமை கொள்கிறோம். தமிழ்நாட்டின் இளைஞர்களை கொள்கை மயப்படுத்தும் இலக்கில் இருந்து சிறிதும் விலகாமல் கட்டுப்பாட்டுடன் கடமையாற்றும் நம் இளைஞரணி, கழகத்தின் நாற்றங்காலாக திகழ்கிறது.

களப் பணியிலும் - கொள்கை நெறியிலும் இளையச் சமுதாயத்தைத் தயார்படுத்த இளைஞரணி மேற்கொண்டு வரும் பணிகள் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டைக் காத்து நிற்கும். 2026 சட்டமன்றத் தேர்தலில் நம் கழக அணி, வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்றிட ஓரணியில் தமிழ்நாட்டை திரட்டுவோம்.தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க, தலைவர் அவர்களிட்ட கட்டளையை நிறைவேற்ற களம் புகுவோம் - பாசிசத்தை நொறுக்குவோம்!

தமிழ்நாடு வெல்லும். என தெரிவித்துள்ளார்.

சட்டமன்றக் கூட்டத்தில்

# செல்போனில் ரம்மி விளையாடிய மகாராஷ்டிரா மாநில அமைச்சர்

**மும்பை, ஜூலை 21-**

மகாராஷ்டிர மாநில விவசாயத்துறை அமைச்சர் மாணிக்ராவ் கோக்டே, சட்டமன்ற கூட்டத்தொடரின் போது செல்போனில் ரம்மி விளையாடிய வீடியோ வைரலாகி வருகிறது.

ஆளும் கூட்டணியில் உள்ள அஜித் பவார் தேசியவாத காங்கிரசை சேர்ந்தவர் மாணிக்ராவ் கோக்டே. எதிரணியில் உள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவரின் பேரன் ரோஹித் பவார் இந்த வீடியோவை பகிர்ந்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்கத்தில் மராத்தியில், "ஆளும் கூட்டணியில் தேசியவாத கட்சி பா.ஜ.க.வை கலந்தாலோசிக்காமல் எதுவும் செய்ய முடியாது என்பதால், எண்ணற்ற விவசாயப் பிரச்சினைகள் நிலுவையில் உள்ளபோதும், மாநிலத்தில் தினசரி 8 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் போதும், வேளாண் அமைச்சருக்கு வேறு எந்த வேலையும் இல்லாததால், ரம்மி விளையாடுவதற்கு நேரம் கிடைத்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "பயிர் காப்பீடு, கடன் தள்ளுபடி மற்றும் விலை ஆதரவு கோரும் விவசாயிகளின் அவலக் குரலை இந்த தவறான அமைச்சர்களும், அரசாங்கமும் எப்போதாவது கேட்பார்களா. ஏழைகளின் வயல்களுக்கு எப்போதாவது வாருங்கள், மாகாராஜாவே" என்று தெரிவித்தார்

# இந்திய அணிக்கு கம்பேக் கொடுக்க முக்கிய முடிவை எடுத்த முகமது ஷமி



**மும்பை, ஜூலை 21-**

இந்திய அணியில் வாய்ப்பை இழந்த முகமது ஷமி மீண்டும் கம்பேக் கொடுக்க, உள்ளூர் போட்டிகளில் விளையாடி இழந்த பார்மை மீட்டெடுக்க முடிவு செய்துள்ளார்.

**முகமது ஷமி...**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி கடந்த ஒருநாள் உலகக் கோப்பை தொடரின்போது ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அதன்பின் குணமடைந்த அவர் உள்ளூர் தொடர்களில் விளையாடி இழந்தை பார்மை மீட்டெடுத்தார். பின்னர் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியில் விளையாடினார்.

**பார்முக்கு வரவில்லை...**

இருப்பினும் அவரால் முன்பு போல் பந்து வீச முடியவில்லை. அவர் கிரிக்கெட்டுக்கு திரும்பி வந்து பல மாதங்களாகிவிட்டன. ஆனால் அவர் தனது சிறந்த பார்முக்கு வரவில்லை. அவர் காயத்தில் இருந்து குணமடைந்து விட்டாலும் செயல்பாடு மந்தமாகவே இருந்து வருகிறது. எனவே இந்திய தேர்வுக்குழு அவரை இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் தேர்வு செய்யவில்லை.

**விளையாடவில்லை...**

இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் 5 போட்டிகளிலும் விளையாடும் அளவுக்கு முழு உடற்தகுதியுடன் இல்லை அதனால்தான் அவரை தேர்வு செய்ய முடியாமல் போனதாக தேர்வுக் குழு தலைவர் அஜித் அகர்கர் தெரிவித்திருந்தார். முகமது ஷமி, ஐ.பி.எல். தொடருக்கு பிறகு எந்த போட்டியிலும் விளையாடவில்லை.

**உள்ளூர் போட்டியில்...**

இந்நிலையில் இந்திய அணியில் வாய்ப்பை இழந்த அவர் மீண்டும் கம்பேக் கொடுக்கும் முனைப்போடு தற்போது முக்கிய முடிவு ஒன்றினை எடுத்துள்ளார். அதன்படி உள்ளூர் போட்டிகளில் விளையாடி இழந்த பார்மை மீட்டெடுக்க உள்ளார். வரும் சீசனுக்காக உள்ளூர் போட்டிக்குரிய பெங்கால் அணியின் உத்தேச அணி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் முகமது ஷமி பெயரும் இடம் பெற்றுள்ளது.

# கார்ல்சன் மீண்டும் தோல்வி



உலகின் நம்பர் 1 செஸ் வீரர் மேக்னஸ் கார்ல்சனை தமிழ்நாடு வீரர் பிரக்ஞானந்தா மீண்டும் வீழ்த்தினார். அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடைபெற்று வரும் பிரீ ஸ்டைல் செஸ் தொடரில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா, 43வது நகர்வில் வெற்றி பெற்றார். கடந்த 3 நாட்களில் கார்ல்சனை 2வது முறையாக வீழ்த்தி பிரக்ஞானந்தா அசத்தியுள்ளார்.

# சேவாக் சாதனை முறியடிக்கப்படுமா..?



இந்தியா- இங்கிலாந்து இடையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் இந்தியா 1-2 என பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 4 ஆவது டெஸ்ட் போட்டி வரும் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், 4 ஆவது டெஸ்ட் போட்டியில் 3 சிக்சர்கள் அடித்தால் டெஸ்ட் போட்டியில் அதிக சிக்ஸர்கள் விளாசிய இந்திய வீரர் என்ற புதிய சாதனையை ரிஷப் பண்ட் படைப்பார். தற்போது ரிஷப் பண்ட் 88 சிக்சர்கள் அடித்து அதிக சிக்ஸர்கள் விளாசிய 2 ஆவது இந்திய வீரர் என்ற சாதனையை ரோகித்துடன் பகிர்ந்துள்ளார். இந்த பட்டியலில் 90 சிக்சர்கள் விளாசி சேவாக் முதல் இடத்தில உள்ளார்.

# இந்திய டெஸ்ட் அணியில் அன்ஷூல்

இந்தியா- இங்கிலாந்து இடையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் இந்தியா 1-2 என பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 4 ஆவது டெஸ்ட் போட்டி வரும் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய பந்துவீச்சாளர்கள் ஆகாஷ் தீப் மற்றும் அர்ஷ்தீப் சிங் காயமடைந்துள்ளதால், சி.எஸ்.கே. வீரர்இந்திய அணியில் அன்ஷுல் கம்போஜ் சேர்க்கப்பட்டுள்ளார். ஐபிஎல் தொடரில் சி.எஸ்.கே. அணிக்காக விளையாடிய கம்போஜ் சிறப்பாக பந்துவீசினார் என்பது குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் தொடரில் 2-1 என இந்தியா பின் தங்கிய நிலையில், இந்திய வீரர்கள் அடுத்தடுத்து காயமடைந்து வருவதால் ரசிகர்கள் கவலை அடைந்துள்ளனர்.

# உலக கோப்பை செஸ்: ஹம்பி வெற்றி

பீடே உலக கோப்பை மகளிர் செஸ் போட்டி ஜார்ஜியாவில் உள்ள படுமி நகரில் நடைபெற்று வருகிறது. இதன் கால் இறுதி ஆட் டங்கள் நேற்று தொடங்கியது. முதல் முறையாக 4 இந்திய வீராங்கனைகள் கால்இறுதிக்கு தகுதி பெற்று இருந்தனர். இந்தியாவின் முன்னணி வீராங்கனையான கொனேரு ஹம்பி கால் இறுதியில் சீனாவை சேர்ந்த சாங்கை எதிர் கொண்டார். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய ஹம்பி தொடக்கத்தில் இருந்தே சிறப்பாக செயல்பட்டார். 53-வது நகர்த்தலின் போது யுக்சின் தோல்வியை ஒப்புக் கொண்டார். இதனால் ஹம்பி வெற்றி பெற்றார். அவர் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளார். இன்று 2-வது போட்டியை 'டிரா' செய்தாலே ஹம்பி அரையிறுதிக்கு தகுதி பெறுவார்.

சென்னை கிராண்ட்மாஸ் டரான வைஷாலி சீன வீராங்கனையும், முன்னாள் சாம்பியனுமான டான் ஜோங்கியை சந்தித்தார்.இந்த ஆட்டம் 72-வது நகர்த்தலில் 'டிரா' ஆனது. மற்றொரு கால்இறுதியில் இந்திய வீராங்கனைகள் திவ்யா-ஹரிகா மோதினர். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய திவ்யா, தொடக்கத்தில் முந்தினார். பின்னர் 31-வது நகர்த்தலில் போட்டி 'டிரா' ஆனது. இருவரும் 0.5-0.5 என சம நிலையில் இருந்தனர்.

# பதிலடி கொடுக்குமா வெஸ்ட் இண்டீஸ்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முதலில் நடந்த 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் வெஸ்ட் இண்டீசை எளிதில் வீழ்த்தி ஆஸ்திரேலியா தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இவ்விரு அணிகள் இடையே 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெறுகிறது.

இதில் ஆஸ்திரேலியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான முதலாவது டி20 கிரிக்கெட் போட்டி கிங்ஸ்டனில் உள்ள சபீனா பார்க் மைதானத்தில் இன்று நடக்கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பிறகு ஆஸ்திரேலிய அணி ஆடும் முதல் டி20 போட்டி இதுவாகும்.

# ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டாம்: கேரளா ஐகோர்ட் உத்தரவு

**திருவனந்தபுரம், ஜூலை 21-**

நீதிமன்ற உத்தரவுகளை மொழிபெயர்த்து தர, ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்தக்கூடாது என கேரளா ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அனைத்து துறைகளிலும், ஏ.ஐ., தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதேநேரத்தில், ஏ.ஐ., தொழில்நுட்பம் வாயிலாக மொழி பெயர்க்கப்படுவது தவறாக இருக்கிறது என்று குற்றச்சாட்டுகளும் எழுந்து வருகிறது. இந்நிலையில், ஏ.ஐ., பயன்பாடு தொடர்பாக நீதிமன்ற அலுவலர்களுக்கு கேரளா ஐகோர்ட் வழிகாட்டுதல்களை வெளியிட்டு உள்ளது.

* நீதிமன்ற உத்தரவுகளை மொழிபெயர்த்து தர, ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்தக்கூடாது.

* நீதிமன்றம் உத்தரவுகளை மொழிபெயர்க்க சாட்ஜிபிடி உள்ளிட்டவற்றையும் பயன்படுத்தக் கூடாது.

* வழிகாட்டுதல்களை மீறி நீதிமன்ற உத்தரவுகளை மொழிபெயர்க்க ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

* செயற்கை நுண்ணறிவை (ஏ.ஐ.,) பயன்படுத்துவது குறித்து போதிய பயிற்சி அவசியம். உயர்நீதிமன்றம் அங்கீகாரம் பெற்ற ஏ.ஐ., செயலிகளை பயன்படுத்த வேண்டும்.

* வழக்கு தொடர்பான வேறு ஏதும் முக்கிய ஆவணங்களில் ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.

* ஏ.ஐ., தொழில் நுட்பம் நன்மை பயக்கும் என்றாலும், அவற்றின் கண்மூடித்தனமான சில செயல்பாடுகள் பாதிப்பை உருவாக்கும். இதனால் நீதித்துறை அதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கை உடன் இருக்க வேண்டும்.

ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து நீதிமன்றம் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுவது, இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் கிரிக்கெட் தொடர் சமன்: 2-வது போட்டியில் இங்கி., வெற்றி

**லண்டன், ஜூலை 21-**

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை சமன் செய்துள்ளது.

**மகளிர் அணி...**

இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி20 மற்றும் ஒரு நாள் தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் நிறைவடைந்துவிட்ட நிலையில், ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் விளையாடி வருகின்றன.

**143 ரன்கள்...**

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி லண்டன் லார்ட்ஸ் திடலில் நேற்று முன்தினம் (ஜூலை 19) நடைபெற்றது. இந்தப் போட்டியில் டக்வொர்த் லீவிஸ் முறையில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. மழை காரணமாக போட்டி 29 ஓவர்களாக குறைத்து நடத்தப்பட்டது. முதலில் விளையாடிய இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 42 ரன்களும், தீப்தி சர்மா 30* ரன்களும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் சோஃபி எக்கல்ஸ்டோன் 3 விக்கெட்டுகளையும், எம் அர்லாட் மற்றும் லின்ஸி ஸ்மித் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

**இங்கிலாந்து வெற்றி...**

இந்திய அணி 143 ரன்கள் எடுக்க, இங்கிலாந்துக்கு 144 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும், மழை காரணமாக ஆட்டம் 21 ஓவர்களாக குறைக்கப்பட்டு இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 21 ஓவர்களில் இலக்கை எட்டி இந்திய அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அந்த அணியில் அதிகபட்சமாக எமி ஜோன்ஸ் 57 பந்துகளில் 46 ரன்கள் எடுத்து கடைசி வரை களத்தில் இருந்தார். அதில் 5 பவுண்டரிகள் அடங்கும். டம்மி பீமௌண்ட் 34 ரன்களும், நாட் ஷிவர் பிரண்ட் 21 ரன்களும் எடுத்தனர்.

**தொடர் சமன்...**

இந்த வெற்றியின் மூலம், 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை (ஜூலை 22) நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒகேனக்கல் அருவியில் குளிக்க பரிசல் இயக்கவும் மீண்டும் தடை



**தருமபுரி, ஜூலை 21-**

ஒகேனக்கலுக்கு நீர்வரத்து விநாடிக்கு 32,000 கன அடியிலிருந்து 43,000 கன அடியாக அதிகரித்துள்ளதை அடுத்து அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக, கேரள மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளிலும் இருந்து அதிகளவு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 32,000 கன அடியிலிருந்து 43,000 கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதித்து மாவட்ட கலெக்டர் சதீஷ் உத்தரவிட்டுள்ளார். மக்கள் பாதுகாப்பாக இருக்க நீர்வளத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

# மீண்டும் வருகிறது: சாம்பியன்ஸ் லீக் டி-20 தொடருக்கு ஐ.சி.சி. அனுமதி..?

**சென்னை, ஜூலை 21-**

சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரை மீண்டும் நடத்த ஐ.சி.சி. அனுமதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்த வருடம் செப்டம்பரில் இத்தொடர் நடைபெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

**சாம்பியன்ஸ் லீக்...**

உலகம் முழுவதும் நடைபெறும் டி20 லீக் தொடர்களில் வெற்றி பெற்ற அணிகள் இந்த தொடரில் பங்கேற்க உள்ளன. இதற்கு முன்னர் 2009-ம் ஆண்டு தொடங்கபட்ட இந்த தொடர் 2014-ம் ஆண்டு வரை நடைபெற்றது. இந்த தொடர் இந்தியா அல்லது தென் ஆப்பிரிக்காவில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் நடைபெற்று வந்தன. ரசிகர்களின் போதிய ஆதரவின்மை மற்றும் ஸ்பான்சர்ஷிப் பிரச்சனைகள் காரணமாக 2015-ம் ஆண்டு இந்த தொடர் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

**சி.எஸ்.கே. சாம்பியன்...**

2009 - 2014 வரை நடைபெற்ற அந்தத் தொடரில் ஐ.பி.எல். தொடரில் வெற்றிகரமான அணிகளான சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் தலா 2 கோப்பைகளை வென்றுள்ளன. கடைசியாக நடைபெற்ற சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சி.எஸ்.கே. சாம்பியன் பட்டம் வென்றது.

**ஐ.சி.சி. அனுமதி...**

இந்த தொடரை மீண்டும் நடத்த இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா கிரிக்கெட் வாரியங்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. அதன் முதல் வெற்றியாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) இந்த தொடரை மீண்டும் நடத்த அனுமதி அளித்துள்ளதாக வந்த தகவல் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை பற்றி

# பாராளுமன்றத்தில் பேச மத்திய அரசு தயார்: அமைச்சர் கிரண் ரிஜிஜூ உறுதி



**புதுடில்லி, ஜூலை 21-**

ஆபரேஷன் சிந்தூர் பற்றி பாராளுமன்றத்தில் மத்திய அரசு பேச தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ கூறி உள்ளார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று (ஜூலை 21) தொடங்கி ஆக.21 வரை நடக்கிறது. சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக ஆக.13 மற்றும் ஆக.14 ஆகிய தேதிகளில் மட்டும் கூட்டம் நடைபெறாது. கூட்டத்தொடரை எப்படி சுமூகமாக நடத்துவது என்பது குறித்து டில்லியில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ தலைமை ஏற்றார். கூட்டம் முடிந்து வந்த அவர் நிருபர்களிடம் பேசினார்.

அவர் பேசியதாவது:- பஹல்காம் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் உட்பட அனைத்து முக்கியமான பிரச்னைகளையும் விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் அது பாராளுமன்ற விதிகளின்படி இருக்க வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அனைத்து பரிந்துரைகளையும் நாங்கள் கேட்டுள்ளோம். அனைத்துக் கேள்விகளுக்கும் மத்திய அரசு பதிலளிக்கும். பாராளுமன்றத்தின் உள்ளே தான் பதில் அளிப்போமே, தவிர வெளியே இல்லை என்றார்.பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் போன்ற நடவடிக்கைகளுக்கு பின்னர் நடக்கும் முதல் கூட்டத்தொடர் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 21.07.2025 முதல் 27.07.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகள் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். வீட்டில் சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான பயணங்கள் இலாபம் தரும்.

பரணி --

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பல வழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்கு புது வாகன யோகம் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். குழந்தைகளின் தேர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். விவசாயிகளுக்கு அரசின் கடன் மற்றும் மானிய உதவிகள் எதிர்பார்த்தபடி எளிதில் கிடைக்கும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலம் முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். மக்கள் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்கள் புகுத்தி ஆதாயம் காண்பர். சிலருக்கு பணி நிமித்தமாக வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். மதிப்பு மிக்க மனிதர்களின் நட்பால் அரசுப் பணியாளர்களின் ஆசைகள் நிறைவேறும். பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும்.

ரோகிணி –

இந்த வாரம் தன வரவு அதிகரிக்கும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும் விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகள் கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும். பூஜா வழிபாடுகளால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மன மகிழ்ச்சி ஏற்படும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராவர். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்க திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தை தரும்.

திருவாதிரை –

இந்த வாரம் ஆக்க பூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வு ஏற்படும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும். புதிய பதவிகள் கிடைத்து, அதற்கேற்ப அந்தஸ்தும் உயரும். தொழில் புரிபவர்களுக்கு அரசு மற்றும் வங்கி மூலம் உதவிகள் கிடைத்து நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். பணிபுரியும் பெண்களுக்கு அதிகாரிகள் கெடுபிடி காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வேறு இடத்திற்கு அல்லது பணிக்கு மாற முற்படுவர். புதிய வீடு போன்ற அசையாச் சொத்துக்களை வாங்குவதற்கு முன், அதற்குரிய மூலப் பத்திரங்கள், வில்லங்க விவகாரங்கள், பட்டா போன்ற ஆவணங்களை ஆராய்ந்து வாங்குவது நல்லது.

பூசம் –

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை தரும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். செல்வாக்கு மிக்க நபர்கள் உதவியால் உங்கள் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவர்.

ஆயில்யம் –

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். சிலருக்குக் குழந்தைகள் தொல்லையும், அவமானங்கள் ஏற்படலாம். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாது. அரசு வகையில் கட்ட வேண்டிய வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும்.

பூரம் –

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை. வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் மூலம் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞானத் தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். தான தர்மங்களை செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுப காரிய செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது. அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியம் ஏற்படும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

சுவாதி –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு அதிகமான பணவரவு இருக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பல வகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். மாணவர்கள் அன்றன்றைக்கு தங்கள் பாடங்கள் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

அனுஷம் –

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

கேட்டை –

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.ஆயினும், ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

பூராடம் –

இந்த வாரம் உடன் பிறப்புக்களின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்கு பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்பு குறைவால், உற்பத்தி திறனை குறையும் வாய்ப்பு ஏற்படலாம்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். . நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்

திருவோணம்-

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் சுமுகமாக இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்கு அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். சுகமான வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

சதயம்-

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணிய திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமான தாக கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும்.

ரேவதி-

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும்.




● மதுரை காமராஜர் சாலையிலுள்ள தனியார் மஹாலில் நேற்று தொல்லியல் கழகத்தின் 33-வது ஆண்டு கருத்தரங்கம், 35-வது ஆவணம் இதழ் மற்றும் கல்வெட்டு அறிஞர் ராஜகோபால் பவள விழா மலர் திசையாயிரம் நூல் வெளியீட்டு விழாவில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று திசையாயிரம் நூலை வெளியிட்டு சிறப்புரையற்றினார்.



● மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று மேலூர் ஒன்றிய பகுதியில் உள்ள வேப்படப்பு, டி.கோவில்பட்டி, பனங்காடி, அரசப்பன்பட்டி, கொட்டகுடி ஆகிய கிராமங்களில் பொதுமக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

பேரவை அறிவிப்பின்படி, முதல்வர் மு.க.ஸ்டாலினால் மாநிலம் முழுவதும் ஒரே விதமான வண்ணம் மற்றும் தனித்துவமான பெயர்ப் பலகைகளுடன் 70 புதிய மாதிரி கூட்டுறவு மருந்தகங்கள் 16.12.2021 அன்று திறந்து வைக்கப்பட்டு; ரூ. 39.87 கோடி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2024 ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழா உரையில் தமிழ்நாடு முழுவதும் 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் எனவும் இதன் மூலம் ஜெனரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள், நியூட்டரா செட்டிகல்ஸ், இந்திய மருந்துகள் 25 சதவீத தள்ளுபடி விலையில் மக்களுக்கு வழங்கப்படும் எனவும் இத்திட்டத்தின்படி, தமிழ்நாடு முழுவதும் 1,000 மருந்தகங்கள் திட்டம் 24.2.2025 அன்று சென்னை மாநகரில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டன.

எல்லோர்க்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் அரசின் கொள்கைப்படி கூட்டுறவு அமைப்புகள் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்றன. விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன்கள் முதலான இடுபொருள்களை வழங்கி, அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகள் கிடைப்பதையும் உறுதி செய்து மத்திய அரசின் பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்று கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு இந்தியத் திருநாட்டில் உயர்ந்து சிறந்து விளங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



● திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் ஆண்டுதோறும் ஆடிப்பூரத் தேர்த்திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் துவங்கியது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். (உள்படம் - அலங்காரத்தில் சுவாமி)

# திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிப்பூரத் திருவிழா கொடியேற்றம்

விருதுநகர், ஜூலை 21-

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் ஆண்டுதோறும் ஆடிப் பூரத் தேர் திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் துவங்கியது.

கருடாழ்வார் உருவம் பொறித்த கொடிக்கு சிறப்பு பூஜைகள் செய்து மேளதாளங்கள் முழங்க ஆகம முறைப்படி பரத்வாஜ் பட்டர் கொடியினை ஏற்றினார். விழாவில் தலைமை பட்டாச்சார்யார் ஸ்ரீவாரி முத்துப்பட்டர், வாசுதேவன் பட்டர், ரகு பட்டர், மணியம் கோபி, சுதர்சன், ஏழூர் நாயுடு மகாஜன சங்கத் தலைவர் வெங்கடேஷ் பெருமாள் உட்பட்ட பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர். 28-ந்தேதி வரை திருவிழா நடைபெறுகிறது.

இந்த திருவிழா காலங்களில் பதினாறு வண்டி சப்பரம், தங்கபல்லக்கு, சிம்மவாகனம், சேஷவாகனம், ஐந்து கருடசேவை, பெரிய அன்ன வாகனம், யானைவாகனம், கண்ணாடி சப்பரம், பூ பல்லக்கு, குதிரை போன்ற வாகனங்களில் ஸ்ரீஆண்டாள் ரெங்கமன்னார் எழுந்தருளி இரவில் வீதி உலா வந்து பொது மக்களுக்கு அருள் பாலிப்பார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் ஆடிப் பூரத்தன்று 28.07.2025 திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இந்த திருவிழாவிற்காக பிரமாண்டமான பந்தல் மேடையில் தினமும் மதியம் 1 மணி முதல் இரவு 10 மணி வரை இன்னிசை கச்சேரி, பரதநாட்டியம், சொற்பொழிவுகள் நடைபெறுகிறது. திருவிழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழு தலைவர் வெங்கட்ராமராஜா, அறங்காவலர்கள் ராம்குமார், வரதராஜன், அ.உமாராணி, நளாயினி, மனோகரன் வெங்கடசாமி, மற்றும் மதுரை அறநிலையத் துறை இணை ஆணையர் மாரியப்பன், விருதுநகர் உதவி ஆணையர் நாகராஜன், கோவில் செயல் அலுவலர் சக்கரையம்மாள், ஆய்வாளர் முத்து மணிகண்டன் கண்காணிப்பாளர் ஆவுடையம்மாள் மற்றும் கோவில் அலுவலர்களும் கோவில் பணியாளர்களும் சிறப்பாக செய்து வருகின்றனர்.



● திருவாரூர் மாவட்டம் கொல்லுமாங்குடியில் "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" பயணத்தின்போது அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி விவசாய வேலை செய்யும் விவசாயிகளிடம் வயலில் இறங்கி அவர்களது குறைகளை கேட்டறிந்தார். அருகில் மாவட்ட செயலாளரும், நன்னிலம் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.காமராஜ் உள்ளார்.

## முதற்கட்ட தேர்தல் சுற்றுப்பயணம் வெற்றி:

# தமிழக மக்களுக்கு இ.பி.எஸ். நன்றி

சென்னை, ஜூலை 21-

"மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம்" என்ற எனது முதற்கட்ட பயணத்தை வெற்றிகரமாக மாற்றி காட்டிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:- 'மக்களைக் காப்போம் - தமிழகத்தை மீட்போம்' என்கிற எனது முதற்கட்ட புரட்சிப் பயணத்தை, மக்கள் எழுச்சிப் பயணமாக மாற்றி, அதை இமாலய வெற்றிப் பயணமாக்கியதில் முழு பங்கும் தமிழக மக்களாகிய உங்கள் அனைவரையுமே சாரும். இந்த எழுச்சிப் பயணத்தை ஜூலை 7-ம் தேதி கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் ஆரம்பித்து, தற்போது திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வரை பிரச்சாரப் பயணத்தை தொடர்ந்து வருகிறேன். கோவை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 31 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகரமாக சுமார் 12.5 லட்சம் மக்களை சந்தித்திருக்கிறேன்.

நான் சென்ற இடங்களிலெல்லாம் என்னை ஆர்வமுடன் சந்தித்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், இளைஞர்கள் உள்ளிட்டோர் தி.மு.க. ஆட்சியில் அவர்கள் சந்தித்து வந்த வேதனைகளை எடுத்துரைத்தனர்.

இவர்கள் எல்லோரும், " உங்களைச் சந்தித்ததில் ஆறுதல் அடைகிறோம். எங்கள் வேதனைகளுக்கு எல்லாம் விடிவுகாலம் வந்துவிட்டது" என தங்களின் வலிகளை மறைத்துக்கொண்டு, உளமார வரவேற்று என்னை அன்பில் நெகிழச் செய்தார்கள். மக்களின் ஆற்றல்மிக்க ஆதரவில் மூழ்கிப்போனேன்.

தமிழக மக்களின் உள்ளம் திமுக-வை வீட்டுக்கு அனுப்ப ஒன்றுபட்டுவிட்டது. அவர்கள் அடைந்திருக்கும் தாழ்வைப் போக்க சபதமேற்றுவிட்டது. நீங்கள் என்ன மடைமாற்றம் செய்தாலும் சரி, எனது எழுச்சிப் பயணம் தொடரும். மக்கள் ஆதரவு இன்னும் பெருகும். 2026-இல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்று, அனைத்து மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் நல் ஆட்சியை வழங்குவோம். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நடப்பாண்டில் 3-வது முறை நிரம்பியது மேட்டூர் அணை

மேட்டூர், ஜூலை 21-

மேட்டர் அணை நடப்பாண்டில் 3வது முறையாக அதன் முழு கொள்ளளவான 120 அடியை நேற்று காலை 8 மணிக்கு எட்டியது. அணை நிரம்பியதை அடுத்து அணைக்கு வரும் 31,000 கன அடி தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது.

கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக, அங்குள்ள அணைகள் நிரம்பியன. பின்னர், அணைகளில் இருந்து உபரிநீர் திறக்கப்பட்டதையடுத்து, காவிரி ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

கடந்த ஜூன் 29-ம் தேதி மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை 44வது முறையாக எட்டியது. பாசனத்துக்காக நீர் திறக்கப்பட்ட நிலையில் அணையின் நீர்மட்டம் குறைந்தது. பின்னர், நீர்வரத்து அதிகரித்ததால், நடப்பாண்டில் ஜூலை 5-ம் தேதி 2வது முறையாக மேட்டூர் அணை மீண்டும் 120 அடியை எட்டியது. பின்னர், மழை குறைந்ததாலும், பாசனத்துக்கு நீர் திறக்கப்படுவது காரணமாகவும் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறையத் தொடங்கியது. இதனால், டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு குறைக்கப்பட்டது.

இந்நிலையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக, மேட்டூர் அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் 18,610 கன அடியாகவும், நேற்று முன்தினம் மாலை 28,784 கன அடியாகவும் இருந்த நிலையில் நேற்று காலை 31,500 கன அடியாக அதிகரித்தது. நடப்பாண்டில் மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை 3வது முறையாக நேற்று காலை 8 மணிக்கு எட்டியது. கடந்தாண்டை போல், நடப்பாண்டிலும் 3 முறை அணை நிரம்பியதால் டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேட்டூர் அணையில் நேற்று காலை 8 மணி முதல் காவிரி ஆற்றில் 31,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணை மற்றும் சுரங்க மின் நிலையம் வழியாக விநாடிக்கு 22,500 கன அடி வீதமும், கால்வாய் பாசனத்திற்காக 500 கன அடி வீதமும், 16 கண் மதகு வழியாக விநாடிக்கு 8,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.




● மதுரை மாநகர் மாவட்ட வடக்கு 2-ம் பகுதி 26-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் வடக்கு வட்டச்செயலாளர் பால்பாண்டி தலைமையில் பகுதி கழகச்செயலாளர் வி.கணேசன் முன்னிலையில் நரிமேடு சரவணா மருத்துவமனை அருகில் நேற்று நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், ஜெயவேல், இஷிகாநாச்சியார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஆர்.பாஸ்கரன், சுகந்தி அசோக், விநாயகர் மூர்த்தி, பீ.பீ.குளம் மகேந்திரன், எஸ்.ஐ.கண்ணன், பாண்டித்துரை, எம்.சிவா, எஸ்.முருகன், முத்துக்குமார், ராஜகோபால், எஸ்.ரவி கலந்து கொண்டனர்.